உ

முருகன் துணை

ஸ்ரீ பாலசித்தர் பதமலர் போற்றி!

ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருவடி வாழ்க!

## 80 ஆம் ஆண்டு

# கல்லூரி ஆண்டு மலர்

# ANNUAL NEWSLETTER

**ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்**

**தமிழ், கலை, அறிவியல் கல்லூரி**

**மயிலம் - 604 304**

**2017 - 2018**

உ

சிவமயம்

ஸ்ரீபாலசித்த குருவே நம


திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் – 604304, விழுப்புரம் மாவட்டம்

## குருமரபு வாழ்த்து

**பரசிவமார் திருக்கயிலைப் பரம்பரையின்**
**வீரசைவ பரமே காட்டப்**
**பரனருளால் பொம்மபுரக் கடலுதித்த**
**சங்குகன்னப் பால சித்தர்**
**வரமயிலார் முருகனுப தேசமுடன்**
**வந்துகுரு வாகி யாண்ட**
**திரமிகுபேர் சிவஞான பாலயநற்**
**குருமரபு சிறந்து வாழி!**



*மயிலம் - பொம்மபுர ஆதீனம்*
*மயிலம் திருமடத்தில் அமைந்துள்ள*
*ஸ்ரீவள்ளி தெய்வானையர் உடனுறை*
*ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி*



*திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்*
*பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்*
*ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்*
*கல்லூரி நிறுவனர்*



**திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்**
**பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்**
**ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**
**மேனாள் செயலர், மேனாள் முகமைத் தலைவர்**



**திருக்கயிலாய பரம்பரை மயிலம் - பொம்மபுர ஆதீனம்**
**இருபதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள்**
**ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்**
**செயலர், முகமைத் தலைவர்**

உ
சிவமயம்
ஸ்ரீபாலசித்த குருவே நம

திருக்கயிலாய பரம்பரை மயிலம் பொம்மபுர ஆதீனம்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் திருமடம்
மயிலம் – 604304, விழுப்புரம் மாவட்டம்

*மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம்*

## 20ஆம் பட்டம் ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்

*அருளிய* **ஆசியுரை**

பாரதத் திருநாடு பழம்பெருமையாலும், பன்முகச் சிறப்பாலும் மாண்புகள் பலவும் நிறைந்த பொன்னாடு. பாரதத் தாயின் தவப்பயனாகத் திகழும் தென்னாடு, எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய சிவபெருமான் விரும்பிஉறையும் திருத்தலங் களாலும் திருமடங்களாலும் சிறப்புற்று ஆன்மீகப் பெருநெறியில் தழைத்து நிற்கிறது. குன்றுதோறாடலில் விரும்பி உறையும் முருகப்பெருமானின் (சேயோன் மேய மைவரை உலகு) திருத்தலங்கள் பலவும் நிறைந்த தமிழகத்தில் நடுப் பகுதியில் அமைந்துள்ள தொன்மை வாய்ந்த தலம் மயிலமாகும்.

இத்திருத்தலத்தில் ஸ்ரீபாலசித்தர் ஆதிசிவஞான பாலய சுவாமிகள் குருவருளும், வள்ளி தெய்வானை உடனுறை மணக்கோல மாமுருகன் திருவருளும் இணைந்து வையத்து மக்களை வாழ்விக்கச் செய்கிறது. முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பவன் எம்பெருமான் முருகப்பெருமான். மெய்ம்மை குன்றா மொழிக்குத் துணையாக விளங்குவது "முருகா எனும் நாமங்கள்" என்பார் அருணகிரிநாதர்.

> மந்திரம் ஒன்று ஆயிரமாய் வளர்ந்து
> பயன் தந்திடும் ஒண்மயிலைத் தண்மலை

எனப் போற்றப்பெறும், மயிலம் தலத்தில் எந்த ஒரு மந்திரத்தையும் ஒரு முறை கூறினால் அது ஆயிரம் முறை கூறிய பலனைத் தரும் என்பது சிவப்பிரகாச சுவாமிகள் திருவாக்கு. இத்தகைய சிறப்பியல்புகள் பலவும் நிறைந்த மயிலம்

திருத்தலத்தையும், திருமடத்து குருமார்களையும் வழிபட்டு மேன்மையடைவோர் மிகப்பலராவர்.

மயிலம் பொம்மபுர ஆதீனம் 18 ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் ஆசியோடு தொடங்கப்பெற்ற ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க்கல்லூரி தற்போது கலை அறிவியல் படிப்புகளோடு 80 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. 1938 - இல் தமிழ்க்கல்லூரி தொடங்கப்பெற்ற போது புலவர் பட்டயம் மட்டுமே இருந்தது. தற்போது தமிழ்த்துறையில் இளங்கலை, முதுகலை, ஆய்வியல் நிறைஞர், முனைவர்பட்ட ஆய்வுப் படிப்புகள் எனச் சிறப்பாக இயங்கி வருகின்றது. வணிகவியல் துறையிலும் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வுப் படிப்புகள் இந்தக் கல்வியாண்டு முதல் இயங்கிக் கொண்டிருக்கின்றது. தமிழ்த்துறை மற்றும் கலை அறிவியல் துறைகளையும் சீரிய முறையில் உயர்த்தும் நன்னெறியில் கிராமப்புற இளைஞர்கள் கல்வியில் சிறந்து உலகெங்கும் வானளாவிய புகழைப் பதியச் செய்ய வேண்டுமென்பதே தலையாய நோக்கம். கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர்களும் இதை உளங்கொண்டே மாணவர்களைச் செம்மைப்படுத்தி வருகின்றனர். கல்வி கற்பிப்பது என்பதைத் தாண்டி மாணாக்கர்தம் படைப்புத் திறனை வெளிக்கொணரும் நிலையில் அவர்களது படைப்புகளோடு ஆண்டுதோறும் ஆண்டுமலர் ஒன்று கல்லூரி ஆண்டு விழாவின்போது வெளியிடப்பெறுகின்றது.

இந்நூலில் மாணவர்தம் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், ஓவியங்கள் எனப் பல்வேறு படைப்புகள் இடம்பெற்றுள்ளன. மாணவர்கள் தமது சிந்தனை ஆற்றலையும் எழுத்தாற்றலையும் இவ்வாண்டு மலரில் உள்ள படைப்புகள் வழி வெளிப்படுத்தியுள்ளனர். மாணவர்களின் படைப்பாற்றல் மேன்மேலும் செழிப்புற்று விளங்க எல்லாம் வல்ல ஸ்ரீபாலசித்தர் ஆதி சிவஞான பாலய சுவாமிகள் குருவருளும் மயிலந்தண் மணக்கோல மாமுருகன் திருவருளும் நிறைந்து விளங்குவதாகுக.

ஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகள்
20ஆம் பட்டம்
மயிலம் பொம்மபுர ஆதீனம்

## கல்லூரிச் செயலரின் வாழ்த்துரை

“கல்வி கரையில கற்பவர் நாள் சில” என்பது ஆன்றோர் வாக்கு. அறியாமை போக்கி அறிவை நல்கும் கல்விக்குக் கரையில்லை. அதனைக் கற்கும் மானிடனுக்கு எழுமைக்கும் எடுக்கும் ஒவ்வொரு பிறவிக்கும் பயனுண்டு.

“ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து”

என்பார் வள்ளுவர்.

“மலை வாழை அல்லவோ கல்வி” என்பார் பாவேந்தர். கையில் உள்ள பணத்தைவிடக் கல்வி அறிவே மேலானது என்பதைக் “கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி” என்பார் அவ்வையார். இத்தகைய சிறப்பியல்புகளைத் தாங்கிய கல்வியைப் பயன் கொள்வதில் உயர்கல்வி முக்கியப் பங்கு வகிக்கின்றது. பள்ளிப்படிப்பு முடித்து கல்லூரிக்கு உயர்கல்வியை நாடிப் பழுமரம் தேடும் பறவைகளாய்த் துள்ளித் திரியும் மாணவர்களின் பாடத்திட்டம் என்பதைக் கடந்து அவரவர் படைப்பாற்றல் என்பது தனித்துவம் மிக்கதாக விளங்குகின்றது.

“நாமே நமக்குத் துணையானால்
நாடும் பொருளும் நற்புகழும்
தாமே நம்மைத் தேடிவரும்”

என்பதை அறிந்து வாழ்வில் தன்கையே தனக்கு உதவி என விளங்கிச் சிறந்த படைப்புகளை வெளிக்கொணரும் சிட்டுக் குருவிகளாய் மாணவர் உலகம் இயங்க வேண்டும். சுற்றும்வரை பூமி, வீசும் வரை காற்று என இளைஞர் உலகம் படைப் பாற்றலை வெளிப்படுத்தும் கலைகளுள் கல்லூரி ஆண்டு மலர் முதலிடம் வகிக்கிறது. கவிதை, கட்டுரை, சிறுகதை, ஓவியம் எனப் பல்வேறு நிலைகளில் மாணவர்தம் படைப்புகள் சிறந்து நிற்கின்றன.

முத்து முத்தாய் எழுந்த இலக்கியங்களை
முத்தெனக் காக்க வேண்டும்.
வீழ்ந்தோரையும் வாழ வைக்கும் தமிழே
நித்தம் பாட்டெழுதிப் பாதுகாக்க வேண்டும்.

எனும் கவிதையில் மாணவரின் தமிழ்ப்பற்று தெற்றென விளங்கு கின்றது.

தாய்மை, நட்பு, உறவுகள், கனவு. புன்னகை, பெண்மை, ஆசிரியர், முயற்சி என்பன போன்ற பல தலைப்புகளில் கவிதைகள், கட்டுரை, சிறுகதை, ஓவியங்கள் சிறந்து நிற்கின்றன. மேன்மேலும் மாணவர்தம் படைப்பாற்றல் சிறந்து விளங்க எல்லாம் வல்ல குருவருளையும், திருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்!

**இராஜீவ் குமார் இராஜேந்திரன்**
செயலாளர்,
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள்
தமிழ்,கலை,அறிவியில் கல்லூரி,
மயிலம் - 604 304.

## பதிப்புரை

கனியிடை ஏறிய சுளையும் - முற்றல்
கழையிடை ஏறிய சாறும்,
பனிமலர் ஏறிய தேனும் - காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும் - தென்னை
நல்கிய குளிரிள நீரும்,
இனியன என்பேன் எனினும் - தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!

எனத் தமிழைப் போற்றுவார் பாவேந்தர் பாரதிதாசன். அத்தகைய பெருமை வாய்ந்த உலகின் மூத்த மொழியான தமிழும் சைவமும் தழைத்து ஓங்கச் செய்கின்ற மயிலம் பொம்மபுர ஆதீனத்தின் குருவருளாலும், மயிலம் மணக்கோல மாமுருகன் திருவருளாலும் 1938 ஆம் ஆண்டு முருகன் செந்தமிழ்க்கழகம் சார்பில் தமிழ்க் கல்லூரி தொடங்கப் பெற்றது. சென்னைப் பல்கலைக்கழத்தின் இணைப்பாணை பெற்று இயங்கி வந்த ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ்க் கல்லூரி 2003-04ஆம் ஆண்டு முதல் அரசு ஆணைப்படி திருவள்ளுவர் பல்கலைக் கழகம் வேலூர் இணைப்பாணை பெற்ற கல்லூரியாக இயங்கி வருகிறது.

பி.லிட் தமிழ் பட்டப்படிப்பு மூன்றாண்டுகள் மானியப் பிரிவிலும், முதுகலை தமிழ் (2003-04) ஆய்வியல் நிறைஞர், பிஎச்.டி தமிழ் ஆய்வுப் படிப்புகள் (2005-06) சுயநிதிப்பிரிவிலும் இயங்கி வருகின்றன.

2007-08 ஆம் கல்வியாண்டு முதல் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பெற்று 2008-09 முதல் பி.காம். வணிகவியல், பி.எஸ்சி - கணினி அறிவியல், 2009-10 முதல் பி.சி.ஏ கணினிப் பயன்பாடு, 2011-12 முதல் பி.ஏ. ஆங்கிலம், எம்.காம் வணிகவியல், 2016-17 முதல் எம்.எஸ்சி கணினி அறிவியல், எம்ஃபில் வணிகவியல், பிஎச்.டி வணிகவியல் ஆகிய

பாடப்பிரிவுகள் சுயநிதிப் பிரிவில் தொடங்கப் பெற்று இயங்கி வருகின்றன.

ஆண்டுதோறும் மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் நோக்கில் கல்லூரி ஆண்டு விழாவில் “ஆண்டுமலர்” ஒன்று வெளியிடப் பெறுகின்றது.

கவிதை, சிறுகதை, கட்டுரை, ஓவியம் எனப் பல்வேறு வகைமைகளில் தாயன்பு, நட்பு, உறவுகள், கனவு, புன்னகை பெண்மை, ஆசிரியர், சமூகப் பிரச்சனைகள் முதலிய பல்வேறு பொருண்மைகளைக் களமாகக் கொண்டு மாணவர்களின் படைப்புகள் 80ஆவது ஆண்டு மலராக வெளிவருகிறது. இதில் மாணவர்களின் கவிதைகளும், சிறுகதைகளும், கட்டுரைகளும், ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன.

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின்

எனும் வள்ளுவரின் வாய்மொழிக்கு இணங்க தகுதியான காலத்தை ஆராய்ந்து, ஏற்ற இடத்தில் மாணவர்கள் தம் திறமைகளைச் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளனர். இளைய சமூகத்தின் படைப்பாற்றலும், உயரிய சிந்தனையும் பெருக எல்லாம் வல்ல குருவருளும், திருவருளும் துணை நிற்கும் என்பது உறுதி.

**முனைவர் ச. திருநாவுக்கரசு**
எம்.ஏ.,பி.எட்., எம்.ஃபில்., பிஎச்.டி.
துணை முதல்வர் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர்
ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை,
அறிவியல் கல்லூரி, மயிலம்.

## ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை & அறிவியல் கல்லூரி தோற்றுவாய்

மயிலம் பொம்மபுர ஆதீனம் பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் சைவத்தையும், தமிழையும் இரு கண்களெனப் போற்றி அருளாட்சி செய்தவர்கள். மயிலம் பொம்மபுரத் திருமடங்களிலும் சைவத்தையும் தமிழையும் வளர்க்கப் புலவர் பெருமக்களைக் கொண்டும் தானும் ஒரு புலவராகவும் நின்று பல்வேறு சொற்பொழிவுகளை நடத்தியருளியவர்கள். அச்சமயத்தில் தமிழ்மீது கொண்ட பற்றினால் முருகன் செந்தமிழ்க் கழகத்தைக் கி.பி.1937 ஆம் ஆண்டில் தோற்றி வைத்துத் தமிழ்க் கல்லூரியைத் தொடங்க விழைந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ சந்நிதானங்கள் ஆசியோடு மயிலம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராகப் பணியாற்றிய திரு.இராஜா முதலியார் அவர்களும், தென்னார்க்காடு மாவட்டக் கல்வி அலுவலராகப் பணியாற்றிய திரு.ச.சச்சிதானந்தம் பிள்ளை அவர்களும் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு.டி.எம்.நாராயணசாமிப் பிள்ளை அவர்களும், உயர்திரு. ஏ.எஸ்.மன்னாடி நாயர், உயர்திரு. பி.காமேஸ்வரராவ் ஆகியோரது நல்லுதவியால் 14.07.1938 இல் முருகன் செந்தமிழ்க் கழகத்தின் சார்பில் தமிழ்க் கல்லூரி உருவெடுத்தது.

சென்னைப் பல்கலைக்கழகத்தால் நியமனம் செய்யப்பெற்ற ஆணையர் வித்துவான் உயர்திரு. டி.கே. நடேஸசர்மா அவர்களின் அறிக்கை அடிப்படையில் (கடித எண். A/336/D/03.08.1941) சென்னைப் பல்கலைக்கழக இணைப்பாணை பெறப்பெற்றது.

கிராமப்புற மாணவர்கள் தமிழில் புலமை பெற வேண்டும் என்ற நோக்கில் தொடங்கப் பெற்றது இக்கல்லூரி. தென்னாற்காடு, வடாற்காடு, சென்னை, செங்கல்பட்டு, சேலம், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களைச் சேர்ந்த பலர் இக்கல்லூரியில் பயின்று ஆதீனக் கர்த்தர்களாகவும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களாகவும்,

முதல்வர்களாகவும், மேல்நிலைப்பள்ளி, உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும் பணியாற்றி ஓய்வு பெற்றும் பணியாற்றிக் கொண்டும் உள்ளனர்.

சென்னைப் பல்கலைக்கழகத் தேர்வில் தமிழ்ப் புலமையில் முதன்மை பெறும் மாணவர்க்கு அளிக்கப்பெறும் பரிசுத்தொகை ரூபாய் ஆயிரத்தினை ஆண்டுதோறும் இக்கல்லூரி மாணவர்களே பெற்று வந்துள்ளனர்.

இக்கல்லூரியில் சென்னைப் பல்கலைக்கழக இணைப் பாணையுடன் பதினெட்டாம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் அருட்பார்வையின் வண்ணம்,

**1. வித்துவான் – தமிழ்ப் பட்டயப் படிப்பு**

நான்கு ஆண்டுகள் 1938 - 39 முதல் 1969 - 70 வரை சீரும் சிறப்புமாக இயங்கி வந்தது. அவர்கள் காலத்திற்குப் பிறகு பத்தொன்பதாம் பட்டம் குருமகா சந்நிதானங்கள் அவற்றை மெருகூட்ட முயன்று,

**2. புலவர் தமிழ் – பட்டயப் படிப்பு**

நான்கு ஆண்டுகள் 1970 - 71 முதல் 1974 - 75 வரை

**3. பி.லிட் தமிழ்ப் பட்டப் படிப்பு**

நான்கு ஆண்டுகள் 1975 - 76 முதல் 1979 - 80 வரை

**4. பி.லிட் தமிழ்ப் பட்டப்படிப்பு**

மூன்று ஆண்டுகள் 1980 - 81 முதல் இன்று வரை சிறந்த முறையில் இயங்கி வருகிறது. மேலும்,

**5. முதுகலைத் தமிழ் – பட்டப் படிப்பு**

இரண்டாண்டுகள் (சுயநிதிப் பிரிவு) 2002 - 2003 முதல் சென்னைப் பல்கலைக்கழக இணைப்பாணையுடன் தொடங்கப் பெற்று 2003 - 2004 முதல் திருவள்ளுவர் பல்கலைக்கழகத்தில் இணைக்கப் பெற்று இயங்கி வருகிறது.

இந்நிலையில் திருமட வளர்ச்சிக்கும், கல்லூரியின் மேம்பாட்டிற்கும் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர்களும், 19ஆம் பட்டம் குருமகா சந்நிதானங்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகவும் திகழ்ந்த **திரு.குமார.சிவ. இராஜேந்திரன் B.Com., B.L** அவர்கள் 2004 முதல் கல்லூரி செயலாளராகப் பொறுப்பேற்றுக் கல்லூரியை உயர்த்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் கீழ்க்கண்ட பாடப் பிரிவுகளைத் தொடங்கி வைத்தார்கள்.



**எம்ஃபில் தமிழ் – ஆய்வுப்படிப்பு, பகுதி நேரம் – முழுநேரம்**

2005 - 06 முதல்

**பிஎச்.டி தமிழ் ஆய்வுப் படிப்பு, பகுதி நேரம் – முழுநேரம்**

2005 - 06 முதல்

மேலும் 2007 - 08 ஆம் ஆண்டு முதல் கிராமப்புற மாணவர்கள் தமிழில் மட்டுமின்றிப் பல்துறையில் பயின்று உலக அரங்கில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கில் ஸ்ரீமத் சிவஞான பாலய சுவாமிகள் தமிழ், கலை, அறிவியல் கல்லூரி எனத் தமிழ்நாடு அரசு உயர்கல்வித் துறை அரசு கடிதம் (நிலை) எண்:223, நாள்: 09.07.2007 அரசு ஆணையின் வண்ணம் பெயர் மாற்றம் செய்யப்பெற்று 2008 - 2009 ஆம் ஆண்டு முதல்,

1. பி.எஸ்சி. கணினி அறிவியல் மூன்றாண்டுகள் 2008 - 09 முதல்
2. பி.காம். வணிகவியல் மூன்றாண்டுகள் 2008 - 09 முதல்
3. பி.சி.ஏ. கணினி பயன்பாடு மூன்றாண்டுகள் 2009 - 10 முதல்
4. பி.ஏ. ஆங்கிலம் மூன்றாண்டுகள் 2011 - 12 முதல்
5. எம்.காம். வணிகவியல் இரண்டாண்டுகள் 2011 - 12 முதல்

ஆகிய பாடப்பிரிவுகள் சுயநிதிப்பிரிவில் தொடங்கப் பெற்றுக் கிராமப்புற ஏழை மாணவர்களின் ஏற்றத்திற்கு வழி வகுத்துக் கொண்டு வருகிறது.

12B, 2F தகுதிகளைப் பெற்ற இக்கல்லூரி 2016 -2017 ஆம் கல்வியாண்டில் பல்கலைக்கழக மானியக் குழுவின் (UGC) தேசியத் தர மதிப்பீட்டுத் தகுதியைப் (NACC) பெற்றுள்ளது. 2017 - 2018 ஆம் கல்வியாண்டில் கல்லூரியின் செயலராகச் சிவத்திரு. இராஜீவ் குமார் இராஜேந்திரன் அவர்கள் பொறுப் பேற்றுக் கொண்டார்கள்.

தற்போது இக்கல்லூரி 20 ஆம் பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவஞான பாலய சுவாமிகளின் குருவருள் ஆசியுடன் சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது.

## 2017 - 2018 ஆம் கல்வியாண்டில் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வுகள்

### 1. தமிழ்த்துறை நிகழ்வுகள்

*1. பி.லிட். வாரக் கருத்தரங்கக் கூட்டங்கள் - 16*

*2. முதுகலைத் தமிழாய்வுத்துறை வார ஆய்வரங்குகள் - 12.*

*3. சிறப்பு ஆய்வரங்கம் - 02.*

*4. பன்னாட்டுக் கருத்தரங்கம் - 1*

*5. உலகத் தாய்மொழி தின விழா*

*6. 71 ஆவது ஆண்டு சுதந்திர தின விழா*

*8. தமிழர் திருநாள் விழா*

*9. குடியரசுத் திருநாள் விழா*

*10. கல்லூரி நிறுவியோர் விழா*

*11. சிவப்பிரகாச சுவாமிகள் குருபூசை விழா*

*12. மார்கழி மாதம் திருப்பாவை, திருவெம்பாவைப் பாடல்கள் வழிபாட்டுக் கூட்டத்தில் பாடும் நிகழ்வு.*

### 2, பி.காம் (வணிகவியல்) துறை நிகழ்வுகள்

**SEMINAR**

1) A special seminar conducted on 28th August 2017, "SEBI (Securities and Exchange Board of India)" by Mr. M. Jayaprakash, M.Cube Academy, Proprietor and Managing Director.
2) Dr. Sandhanakrishnan conducted a Bridge Course on 03/07/2017, Topic "Behavioural Change in Student Life".
3) A Special Seminar on "Commerce Education in India Relavance in Life and Curriculam" by our Chief guest Dr. T.Sivakumar, Assistant Professor of Commerce, D.B.Chain college, Chennai.
4) IAS- Awarness Programme on 28/07/2017 by special guest Mr. Kasivishwanathan, Chairman(Former), TNPSC.
5) "Tally Special Coaching Awarness Programme conducted By Mr. Magesh from Edinbridge, Skill Solutions Private Limited Chennai.

**National Conference**:

One day National Conference on "**Changing Global Economic Scenario in Commerce- Opportunities & Challenges**" on 3rd March 2018, Chief guest Dr. P. Natarajan, Conroller of Examinations(i/c) Pondicherry University.

**First Session: From 11.30am to 1.15pm.**

| | |
|---|---|
| Topic | : "Impact of G.S.T in India Economy" |
| Chairperson | : Dr.C.Kandasamy, M.com.,MBA,M.Phil., Ph.D. Dree Dattha Group of Institutions, Hyderabad. |
| Co-Chairperson | : Mr. S.Sambath M.com, M.Phil., Set, Net Department of Commerce, Pondicherry University. |

**Second Session: From 2.00pm to 4.pm**

| | |
|---|---|
| Topic | : "FDI – Issues and Challenges" |
| Chairperson | : Dr.M.Rajarajan,M.com.,MBA, M.Phil.,B.Ed., BLL, Ph.D. Assistant Professor, Annamalai University. |
| Co-Chairperson | : Dr.K.Thamizhselvan,M.com.,MBA,M.Phil., Ph.D. Assistant Professor, Annamalai University. |
| Paper Presentation | : Faculties, Research Scholars and Students from various Colleges and universities |

**International Journal Publication**

| | |
|---|---|
| Journal Number | : UGC Approved Journal Number: 44120 |
| Name of the Journal | : Shanlax International Journal of Commerce |

Topic : Changing Global Economic Scenario in Commerce- Opportunities & Challenges"

Issue Date : 01/03/2018

**Industrial Visit:**

Final Year B.Com and M.Com Students went to two days Industrial Visit.

| Industry Name | Date of Visit |
|---|---|
| 1) TANTEA – Coonoor | 19/08/17 |
| 2) Doddabetta Tea Factory | 20/08/17 |

3) M.com Students went to visit Book Fair at Neyveli on 07th July 2017.

**Citizen Consumer Club:**

Programme : A Special Seminar on Consumer Awarness Programme

Date of the Programme : 15/03/2017

Chief Guest : S. V. Namachivayam, President, State Consumer Protection Council, Tamil Nadu

**Events and Seminar at Other the colleges:**

1) Our Department UG Students participated and presented at National Level Inter Collegiate Competition and Intra-Department Exhibition at **ST. Joseph's College, Manjakuppam, Cuddalore on 16.09.2017(COMMET – SEP17)**
2. Our PG students and M.Phil Scholars participated in National Level Seminar Topic " Modern Business Scenario" **at St. Ann's College of Arts and Science, Tindivanam on 27th January 2018.**
3. Our UG Students participated at "A State Level Management Meet ASTUTE 2K18" at **Surya Group of Institutions school of Management studies. NH 45, GST Road, Vikravandi on 9th Feb 2018.**
4. Our M.Phil. Research Scholars Presented and Participated a National Seminar on "Market Opportunities for Micro Insurance in India" at Annamali University, Annamalai Nagar – 608 002 on 17th Feb 2018.



### 3, பி.எஸ்சி., பி.சி.ஏ. துறை நிகழ்வுகள்

1 17/07/2017: Conducted a **Forum** through **"Cyber Art Association"Topics:** 9 Dimension, Windows 10 OS, Google Product

2 19/08/2017: **Photography EventTitle:** "Dream Frame 2017"**Topic:** Summer rain, Fresh start, Threes in Nature, Confidence, Tamil sports, Education, Independence, Tamil Festivals, Adventure, True Love

3. 10/08/2017: **Special Seminar:** "Cloud computing" A.Thirugnanasambantha Murthy,Dept. of Computer Applications Adhiparasakthi Engineering College, Melmaruvathur.

4 26/09/2017: **Special Seminar** on "Digital Image Processing" Dr. S. Sathiamoorthy, Asst. Professor,Department of Computer Science, Annamalai University,Chidambaram

5 16/02/2018: **National Level Technical Symposium "SELFIE 18"Event name:** Quiz, Debugging, Paper presentation, Poster Presesntation, Shortfilm, Adzap, Cookery, Vegetable carving, Mehandhi

### 4, பி.ஏ. ஆங்கிலத் துறை நிகழ்வுகள்

1. Tableau performances by first and third year students on **Dr. Faustus' "Seven Deadly Sins"** on 26 July 2017.
2. Group Discussion by third year Students – on spot topic.
3. Literary Competitive test about English Literature in general (50 Objective type questions).
4. Drama Performance by II year Students Play "king Lear" by Shakespeare on 27th September 2017.

5. Literary Quiz competition on 05 October 2017
6. Special Seminar on **"Literary Criticism"** held on 6th October 2017.
7. Literary Test **Elco Competition** was conducted on 25th January 2018.
8. Celebrate World Slap day on 15 February 2018.
9. Celebrated International day of Happiness on 20 March 2018.
10. Literary Drama Competition held on 7th April 2018.

### 5, நூலக நிகழ்வுகள்

1 Library has been conducted for the Students One day user Awareness workshop on "How to Access to E-resources" on 24th March 2018.

### 6. நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்வுகள்

- *03.08.2017 - டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு மற்றும் தடுப்பு நடிவடிக்கைகள்*
- *10.08.2017 - குடற்புழு ஒழிப்பு நடவடிக்கைள் மற்றும் விழிப்புணர்வு*
- *11.08.2017 - கல்லூரி வளாகத் தூய்மைநாள்*
- *15.08.2017 - சுதந்திர தின விழா*
- *05.09.17 - குருதிக்கொடை முகாம்*
- *31.10.2017 - தேசிய ஒற்றுமை நாள்*
- *26.01.2018 - குடியரசு தின விழா*
- *21.03.18 - 27.03.18 - சிறப்பு முகாம், செண்டூர் கிராமம்*

### 7. இளைஞர் செஞ்சிலுவைச் சங்க நிகழ்வுகள்

- *21.06.2017 - உலக யோகா தின விழா*

# ஆண்டுமலர் படைப்புகள்

## மரபுக் கவிதைகள்

பி.லிட்., தமிழ் இரண்டாமியாண்டு


| வ. எண் | தலைப்பு | பெயர் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | உள்ளங்கவர் கள்வன் | ந. சூரியமூர்த்தி | 28 |
| 2 | மனமது ஒழுங்குபட்டால் | க. அருள்பாண்டியன் | 28 |


## புதுக் கவிதைகள்

பி.லிட்., தமிழ் மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 3 | வாழ்க்கை | ரா. விக்னேஷ்வரி | 28 |
| 4 | பூந்தோட்டம் | ரா. சுவாதி | 29 |
| 5 | எல்லாம் நீ | மை. பாரதி | 30 |
| 6 | அன்றும் இன்றும் | மை. பாரதி | 31 |
| 7 | உறவுகள் | மு. செல்வாம்பாள் | 31 |
| 8 | இருமணம் இணைவது திருமணம் | அ. பாக்கியலட்சுமி | 32 |
| 9 | நம்பிக்கை | அ. பாக்கியலட்சுமி | 33 |
| 10 | தமிழ் | அ. பாக்கியலட்சுமி | 33 |


பி.லிட்., தமிழ் இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 11 | வேண்டும் வரங்கள் | ப. அபிராமி | 33 |
| 12 | கருவறை | ச. அனிஷா | 34 |

பி.லிட். தமிழ் முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 13 | தாய் | த. கன்னிகா | 34 |
| 14 | என் கனவு | நா. பவானி | 35 |
| 15 | மழை | வெ. ஆர்த்தி | 36 |

பி.காம். முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 16 | கல்லூரி | எம். ஷர்மிளா | 36 |
| 17 | தனித்திரு விழித்திரு | எம். ஷர்மிளா | 37 |
| 18 | ஆத்திசூடி | எம். ஷர்மிளா | 38 |
| 19 | நம்பிக்கை | எம். ஷர்மிளா | 38 |

எம்.எஸ்சி. இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 20 | வாழ்க்கையின் பரிமாணங்கள் | கு. சத்திய மூர்த்தி | 38 |
| 21 | கனவு | க. ரம்யா | 39 |
| 22 | சுயநலம் | க. ரம்யா | 39 |
| 23 | எப்போது | அ. சங்கரி | 39 |

பி.எஸ்சி. மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 24 | தோழி | ம. ரவி | 40 |
| 25 | அப்துல்கலாம் | ஜெ. ஜெயலட்சுமி | 40 |
| 26 | அம்மா | ரா. உமா | 41 |

பி.எஸ்சி. இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 27 | மீண்டும் அமர முடியாத சிம்மாசம் | ஆர். கஜலட்சுமி | 42 |
| 28 | காகிதம் | ஆர். கஜலட்சுமி | 42 |
| 29 | வெற்றி | ஆர். கஜலட்சுமி | 42 |
| 30 | நட்பு | ஆர். கஜலட்சுமி | 42 |





| | | | |
|---|---|---|---|
| 31 | கல்லூரி | வீ. புவனேஸ்வரி | 43 |
| 32 | வெற்றி | அ. சிவரஞ்சனி | 43 |
| 33 | உன்னத உறவு | அ. சிவரஞ்சனி | 44 |

பி.சி.ஏ. மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 34 | தாய் | க. லலிதா | 44 |
| 35 | அழகு | க. லலிதா | 44 |
| 36 | சங்கீதம் | க. லலிதா | 45 |
| 37 | வறட்சி | யு. பவித்ரா | 45 |
| 38 | கனவுகள் | யு. பவித்ரா | 45 |
| 39 | மழை | எ. விஷ்ணுபிரியா | 45 |
| 40 | பள்ளிக்கூடம் | எ. எழிலரசி | 46 |
| 41 | காற்று | எ. எழிலரசி | 46 |
| 42 | அழகிய தருணங்கள் | எ. எழிலரசி | 46 |
| 43 | அண்ணன் | ஏ. திவ்யா | 47 |
| 44 | காற்று | ஏ. திவ்யா | 47 |
| 45 | புன்னகை | எம். திவ்யா | 47 |
| 46 | சோகம் | எம். திவ்யா | 47 |
| 47 | அன்பு | எம். திவ்யா | 48 |

பி.சி.ஏ. முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 48 | பெண்மை | எம். விஜயலட்சுமி | 48 |
| 49 | சிகரம்தொடு | சீ. காமாட்சி | 49 |

பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 50 | அன்னை | எம். வினிதா | 49 |
| 51 | அப்பா | எம். வினிதா | 50 |

| | | | |
|---|---|---|---|
| 52 | பெண் | ஆர். சுதாகர் | 50 |
| 53 | என் தாய் | எ. அஜித்குமார் | 50 |
| 54 | கற்றுத் தருவது | இ. ஒலியா | 51 |


பி.ஏ. ஆங்கிலம், இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 55 | நண்பன் | ச. பிரியங்கா | 51 |
| 56 | பிறந்தநாள் | ச. பிரியங்கா | 52 |
| 57 | ஓவியம் | மூ. ஆர்த்தி | 52 |
| 58 | ஜல்லிக்கட்டு வெற்றி | சு. சுகன்யா | 52 |
| 59 | ஒருவர் நட்பில் ஒருவராய் | பா. சிவப்பிரியா | 53 |
| 60 | வாழ்க்கை | பா. சிவப்பிரியா | 53 |
| 61 | நட்பு | பா. சிவப்பிரியா | 53 |
| 62 | காக்கும் கடவுள் | ரா. அனிதா | 54 |
| 63 | குழந்தை | ரா. அனிதா | 54 |
| 64 | தாயன்பு | அ. தேவிபாலா | 54 |
| 65 | ஆசிரியர் | அ. தேவிபாலா | 55 |
| 66 | ஆதாரம் | ஆர். ரம்யா | 56 |
| 67 | உயிருக்குள் உயிராய் | எம். ஸ்ரீமதி | 56 |
| 68 | திருமண உணவு | எம். ஸ்ரீமதி | 57 |
| 69 | தாயின் உன்னதம் | என். பொன்எழில் | 57 |


பி.ஏ. ஆங்கிலம், முதலாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 70 | முயற்சி | எஸ். திவ்யா | 58 |
| 71 | நட்பு | இ. பாமாஸ்ரீ | 58 |
| 72 | விடாமுயற்சி | என். தெய்வானை | 59 |
| 73 | வாழ்க்கை | என். தெய்வானை | 59 |





| | | | |
|---|---|---|---|
| 74 | சுதந்திரத்தால் தணிந்த தாகம் | ஏ. சரிதா | 59 |


## படித்ததில் பிடித்த கவிதைகள்

பி.எஸ்சி., மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 75 | அப்துல்கலாம் | மு. சீத்தா | 60 |
| 76 | வாழ்க்கை | ஜெ. கலைச்செல்வி | 60 |


பி.எஸ்சி., இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 77 | அம்மாவின் ஆசை | ஆர். கஜலெட்சுமி | 61 |
| 78 | நேரம் | ஆர். கஜலெட்சுமி | 61 |
| 79 | வெற்றி | ஆர். கஜலெட்சுமி | 61 |
| 80 | கண்ணீர் | ஆர். கஜலெட்சுமி | 61 |
| 81 | சாதனை | ஆர். கஜலெட்சுமி | 61 |


## சிறுகதைகள்

பி.லிட்., தமிழ் மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 1 | பணம் | மை. பாரதி | 63 |


பி.லிட்., தமிழ் இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 2 | வழிகாட்டிய ஆசான் | ச. காயத்ரி | 64 |


பி.சி.ஏ., தமிழ் முதலாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 3 | நட்பு | சீ. தமிழரசி | 65 |


பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 4 | தெய்வமான ஆசிரியர் | எஸ். லூர்துமேரி | 67 |


பி.ஏ. ஆங்கிலம், இரண்டாமியாண்டு


| | | | |
|---|---|---|---|
| 5 | செய்ந்நன்றி | யு. தேவிபாலா | 69 |

## கட்டுரைகள்

பி.லிட். தமிழ் மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ | மை. பாரதி | 73 |

பி.லிட். தமிழ் இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 2 | இந்தியா வளர்ச்சிப் பாதையை நோக்கி | கௌசல்யா | 77 |

பி.லிட். தமிழ் முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 3 | படபடக்கும் பட்டாம்பூச்சி | கோ. பத்மாவதி | 79 |
| 4 | பெண் | அ. யுவராணி | 81 |
| 5 | பெருந்தலைவர் காமராசர் | மு. அபிநயா | 83 |

பி.ஏ. ஆங்கிலம் மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 6 | சிக்கனமும் சிறுசேமிப்பும் | ஏ. ஒலியா | 85 |

## ஓவியங்கள்

பி.லிட்., தமிழ், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 1 | குண்டலத்தைக்காலால் எடுக்கும் ஈசன் | க. அருள்பாண்டியன் | 90 |
| 2 | தமிழ்க்கடவுள் முருகன் | கா. கருணாதேவி | 91 |
| 3 | கோகுல கண்ணன் | வெ.விஜி | 92 |
| 4 | முழுமுதற் கடவுள் | கா. திவ்யா | 93 |
| 5 | விநாயகர் | வெ. சிவசங்கரி | 94 |
| 6 | அழகிய கண்ணன் கோகுல மன்னன் | அ. பாண்டிமீனாள் | 95 |



பி.லிட்., தமிழ், முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 7 | காக்கும் கணபதி | சி. மோகனா | 96 |
| 8 | ஆயர்குலமே நேயர்கரமே | சீ. ஸ்ரீவித்யா | 97 |

எம்.காம், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 9 | திரிசூல நாயகன் | டி. ராஜசேகர் | 98 |
| 10 | பால கணபதி | பி. சந்துரு | 99 |
| 11 | தசரத மைந்தன் | பி. சந்துரு | 100 |
| 12 | சிவ கணபதி | பி. சந்துரு | 101 |

பி.காம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 13 | அழகு மயில் | என். சசிகலா | 102 |
| 14 | குருவாய் வருவாய் | ஐ. கன்னியப்பன் | 103 |
| 15 | சித்திர மயில் | எ. ராகுல் | 104 |

பி.காம், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 16 | காட்டுராஜா | என்.கே. பிரபு | 105 |

பி.எஸ்சி., இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 17 | வீரத்தின் உருவம் தமிழன் | ஐ. ஜெயகுமார் | 106 |
| 18 | ரோஜாவின் ராஜா | ஆர். கெஜலட்சுமி | 107 |

பி.சி.ஏ., மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 19 | கவிக்குயில் | எஸ். இராஜேந்திரன் | 108 |
| 20 | கனவு நிலா | எஸ். இராஜேந்திரன் | 109 |

பி.சி.ஏ., முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 21 | போதிதர்மன் | எஸ். பெருமாள் | 110 |
| 22 | இசையும் அவனும் | எ. மஞ்சு | 111 |

பி.ஏ. ஆங்கிலம், மூன்றாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 23 | ஆடல்கலை | டி. நிரஞ்சன் புகழ் | 112 |
| 24 | வளர்ச்சிப் பாதையில் இந்தியா | வி. பிரவின்குமார் | 113 |
| 25 | அன்றில் பறவைகள் | வி. பிரவின்குமார் | 114 |
| 26 | சுப்பிரமணிய பாரதியார் | டி. ரஞ்சிதா | 115 |
| 27 | அப்துல்கலாம் | இ. ஒலியா | 116 |

பி.ஏ. ஆங்கிலம், இரண்டாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 28 | முதற்கடவுள்விநாயகர் | என். பொன்னெழில் | 117 |
| 29 | இணைந்திருக்கும் இருமுகங்கள் | சு. சுகன்யா | 118 |
| 30 | நவநீதக் கண்ணன் | ஆர். ரம்யா | 119 |
| 31 | ஆசை அம்மா | பி. சிவசங்கரி | 120 |

பி.ஏ. ஆங்கிலம், முதலாமியாண்டு

| | | | |
|---|---|---|---|
| 32 | வண்ண மயில் | என். அட்சயா | 121 |
| 33 | எழிலோவியம் | சி. டெய்சிராணி | 122 |


# கவிதைகள்

## மரபுக் கவிதைகள்

### உள்ளங்கவர் கள்வன்!

தண்ணென்ற செம்மாரி களரென்ற மண்ணின்
தலைவிழுந்து கண்ணிமையென் றொன்றுமது போல
மண்ணென்ற இன்பமொடு மழையென்ற உள்ளம்
மன்னிபுரண் டூறிசோர்ந்து கடையிலுனை வேண்ட
வெண்ணென்ற திங்களோடு கட்செவியும் சூடி
வென்றாயென் உள்ளத்தை மீட்டெடுத்தே ஆண்டாய்
விண்ணின்று வெயில்காட்டும் பரிதியொப்ப ஈசா!
வீழ்ந்தமழை அனையமனம் நின்பார்த் தாயே!

**ந. சூரியமூர்த்தி,**
பி.லிட்., இரண்டாமியாண்டு

### மனமது ஒழுங்குபட்டால்

மனமது ஒழுங்குபட்டால் மந்திரம் எதற்கே!
மனமது ஒழுங்குபட்டால் மாயை நேராதே!
மனமது ஒழுங்குபட்டால் பிறப்புஞ் சேராதே!
மனமது ஒழுங்குபட்டால் கோநிலை சேருமே!

**க. அருள்பாண்டியன்,**
பி.லிட்., இரண்டாமியாண்டு.

## புதுக் கவிதைகள்

### வாழ்க்கை

நேசிக்க யாரும் இல்லாத போது
யோசிக்க வைக்கிறது வாழ்க்கை!
இன்ப துன்பத்தில்
நினைவில் நிறுத்திக் கொள்ளும்
எந்த ஒரு நிமிடமும்
நிரந்தரமில்லை!
இன்பத்தையும் துன்பத்தையும்
கடந்து செல்வது வாழ்க்கை!
வாழ்பவனையும் வாழும் விதத்தையும்
பொருத்து வாழ்க்கை அமைகிறது!
உயர்வு தாழ்வு, ஏழை பணக்காரன்
எனும் பாகுபாடில்லாமல்
பழகுபவனே மனிதன்!
விழுவது தோல்வியல்ல!
விழுந்து எழாமல் இருப்பதே தோல்வி

**ரா. விக்னேஷ்வரி**
பி.லிட்., மூன்றாமியாண்டு

### பூந்தோட்டம்

என் முகம் பார்க்க எனக்கு
கண்ணாடி தேவையில்லை
என் தம்பியின்
இரு கண்கள் இருந்தால் போதும்
கோபத்தின் ஆழ் கடலில்
என்னை முத்தாய்
ஒளிரச் செய்தாய்
அன்பு என்னும் ஆழ்கடலில்
என்னை வைரமாய் ஜொலிக்கச் செய்தாய்
சிரிப்பின் சிந்தனையில்
என்னைச் சிலையாய் வடித்தாய்
என்றும் உன்பாசம்
எண்ணில் நீங்காச் செல்வம்
இப்போது இருட்டில் ஒரு விளக்காய்
இருந்தால் போதும்
அழகிய பூந்தோட்டத்தில்
மலர்ந்திருந்த நான்
இன்னும் சில மாதங்களில்
புதிய தோட்டத்தில் புதுமலராய்

வாசம் அளிக்கும்
என்ற நம்பிக்கையில்!

**ரா. சுவாதி,**
பி.லிட்., மூன்றாமியாண்டு.

## எல்லாம் நீ

ஓய்வின்றி ஓடி
முடிவில்
கடலில் கலக்கும்
ஆறாய் இரு....
செல்லும் வழியெல்லாம்
வளமாக்கப் பிறந்தவன் நீ!

காற்றினிலே கரைந்து போகும்
கற்பூரமாய் இரு...
ஆலய வழிபாட்டின் அம்சம் நீ!
பூமியைத் துளைத்து எழும்
விதையாய் இரு...
எதிர்கால மரமும் நீ!

ஒருநாள் பொழுதில்
வாழ்ந்து, உதிரும்
மலராய் இரு....
வாழும்போதே
மணம் வீசுபவன் நீ!

உன்னை அடித்து, துவைத்துப்
பிழிந்தாலும் நைந்துபோகும் வரை
உழைக்கும் துணியாய் இரு....
மானம் காக்கப் பிறந்தவன் நீ!

அன்பெனும் மழையைப்
பொழிபவனாய் இரு...
தீய எண்ணம் கொண்ட
கருங்கல் மனதையும்
கரைப்பவன் நீ!

நேர்மையான வழியைப்
பின்பற்றுபவனாய் இரு...
எளிய மக்களைக் காக்கும் காவலனாய்
உலகையே ஆள்பவன் நீ!

## அன்றும் இன்றும்

அன்று
தாத்தா சாப்பிட்டது
பாட்டி கைநிறைய
மடித்துக் கொடுத்தது
வெற்றிலை!
இன்று...
அப்பா சாப்பிட்டது
அம்மா கைநிறைய
அள்ளிக் கொடுத்தது
மாத்திரை!
அன்று....
சொட்டுச்சொட்டாய் நீர்
வீணாகியது குழாயில்
அலட்சியம்!
இன்று....
சொட்டு நீருக்காக
ஏங்குகின்றன
காவிக் குடங்கள்
வீதியில்
நீர் மிக அவசியம்!

**மை. பாரதி,**
பி.லிட்., மூன்றாமியாண்டு.

## உறவுகள்

அப்பா,
உங்களுடன் இருந்த நாள் மகிழ்ச்சி!
உன்னுடன் இருக்க வேண்டுமென பலநேர யோசனை,
அது முடியாது என்றவுடன் சிலநேர வேதனை.
கடவுளிடம் வேண்டிக் கொள்கிறேன்
மீண்டும் மறுஜென்மம்

நான் உனக்கு மகளாக அல்ல
நீ எனக்கு மகனாக!
நாம் கருவில் தோன்றிப் பிறக்கும் வரை,
நம்மைச் சுமந்தவள் தாய்.
பிறந்தவுடன் தன்னுடைய மார்பில்
சுமந்து வளர்த்தார் தந்தை.
கருவில் சுமந்த தாயையும்,
மார்பில் சுமந்த தந்தையையும்,
தெய்வம் என்று சொன்னால்.
நாம் பிறந்ததில் இருந்து இறக்கும் வரை
நம்மை மனதில் சுமக்கும் அண்ணனை
என்னவென்று என்று சொல்வது?

**மு. செல்வாம்பாள்,**
பி.லிட்., மூன்றாமியாண்டு.

## இருமனம் இணைவது திருமணம்

மனம் இணைந்தால் திருமணம்
என்ற முறை மாறி
மலர் அணிந்தால் திருமணம்
என்ற காலமாயிடுச்சே!
பொய்யும் வழுவும் தோன்றியதால்
ஐயர் யாத்த கரணமும்
காரணமின்றி முற்றுற்றது
தீவலம் வந்து
மங்கல நாண் அணிந்து
மங்கல மேளம் முழங்க
விண்ணும் மண்ணும்
சாட்சியாக நின்ற காலங்கள் மாறி
புகைப்படக் கருவிக்குள் புகுந்து
தகைமை குன்றிய தகவல் தட்டிகள்
சாட்சிக்கென்றே
மாறிவிட்ட பண்பாடு
எத்தனை சாட்சிகள் இருந்தும்
சட்டத்தில் ஓட்டை விழுந்தது.
மனமுறிவு என்ற ஒரே வார்த்தையில்
பிரித்தாளுகிறது
தனிமரமாய் பெண் மட்டும்!

## நம்பிக்கை

மகளே மறந்து விடு
ஏழைக்குலத்திற்கு ஏற்றதல்ல
மகளே மறந்து விடு
என்றுரைத்தான் எந்தை
அன்பைச் சொல்ல அளவில்லை
கல்லூரி செல்ல ராசியில்லை
ஆசை அலைகள் விடவில்லை
அடைய முயன்றேன்
கல்லூரிக் கடலை
சென்ற காலங்கள் நின்றன
எண்ணங்கள் வென்றன
நம்பிக்கைகள்...

## தமிழ்

முத்து முத்தாய் எழுந்த இலக்கியங்களை
முத்தெனக் காக்க வேண்டும்
வீழ்ந்தோரையும் வாழவைக்கும் - தமிழே!
நித்தம் பாட்டெழுதி உன்னைச்
சொத்தாய்ப் பாதுகாக்க வேண்டும்.

**அ. பாக்கியலட்சுமி,**
பி.லிட்., மூன்றாமியாண்டு.

## வேண்டும் வரங்கள்

நினைத்தவுடன் மழை
இரவு நேர மெல்லிசை
காலமெல்லாம் சிரிப்பு
பொய் இல்லா நட்பு
மீண்டும் ஒரு பள்ளிப் பரவசம்
தோள் சாய தோழி
உயிர் கொடுக்கத் தோழன்

*தாய் மடி தூக்கம்*
*தூக்கத்தில் மரணம்*
*மரணம் வரை உன் நட்பு!!!*

**ப. அபிராமி,**
பி.லிட்., இரண்டாமியாண்டு.

### கருவறை

*நிறைமாத கர்ப்பிணியாய்*
*உன் வயிற்றில் இருக்கையில்!*
*கவிழ்ந்து படுக்காது*
*விட்டத்தையே பார்த்து*
*வட்டமிட்டு வந்தாய்!*
*வயிற்றில் வலி மிகினும்*
*கருவில் நான் கரைந்துவிடாமல்*
*நல்லுரு கொடுத்தாய்!*
*பிடித்த உணவுகள் பல இருக்க*
*பத்திய உணவுண்டு*
*நோன்பிருந்தாய்!*
*பத்து மாதங்களுக்கு*
*மேல் சுகமாய்*
*சுமக்க மனமிருந்தும்*
*வெளியேற்றி உயிர்*
*கொடுத்தாய்!*
*வெளி வெளிச்சம்*
*கொடியதாய்! இருக்க*
*உன் கருவறை எனும்*
*சொர்க்கமே வேண்டும்*
*எனக்கு!*

**ச. அனிஷா**
பி.லிட்., இரண்டாமியாண்டு

### தாய்

*உன் உயிரின் உயிராகிய எனக்கு*
*நீ உயிர் கொடுத்தாய் தாயே*



*நீயோ என் தேவதை*
*நானோ உன் தேவதை - தாயே*
*நீயோ கடவுள் எனக்கு*
*நானோ உலகம் உனக்கு*
*நீ உள்ள இடம் எனக்கு சொர்க்கம்*
*நான் இல்லாஇடம் உனக்கு நரகம்*
*நீயே என் வாழ்க்கையின் அர்த்தம்*
*நீயே என் வாழ்வின் வழிகாட்டி*
*தாயே என்னை உருவாக்கியவள் நீ*
*என்னைப் படைத்த கடவுள் நீயே!*
*எனக்குப் பாசமும், பண்பும் ஊட்டி*
*வளர்த்தவள் நீயே!*
*எந்த பிறவியிலும்*
*எனக்குத் தாயாக நீ கிடைக்க - நான்*
*இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.*

**த. கன்னிகா,**
பி.லிட்., முதலாமியாண்டு,

### என் கனவு

*எட்டாத தூரத்தில்*
*“என் கனவுகள்”*
*ஏற்றத்தில் கொண்டுசெல்லுமோ*
*ஏமாற்றத்தில் இட்டுச்செல்லுமோ*
*வாழ்க்கையின் வேகம்*
*என் கனவை நோக்கி*
*காத்துக்கொண்டிருக்கும்*
*கடமைகளை நிறைவேற்ற*
*காலம் நேரம் குறைவாகவே உள்ளன.*
*இந்நிலையில்,*
*நேற்றைய பிரச்சனைகள்*
*நாளைய அச்சங்கள்*
*காலத்தை வீணாக்குவதில் லாபமென்ன?*
*நிகழ்காலத்தை உணர்ந்து*
*நிமிர்ந்து நில்!*

*கனவே*
*நனவில் நடைபோடு!*

**நா. பவானி,**
பி.லிட்., முதலாமியாண்டு.

### மழை

*மழையே நீ ஆகாயத்தில் பிறக்கிறாய்!*
*பூமியில் சிலிர்க்கிறாய்!*
*வானவில்லைத் தோன்ற வைக்கிறாய்!*
*என்னையும் மண்ணையும் நேசிக்கிறாய்!*
*நீ தூரத்தில் சென்றாலும்*
*உன்னைத் துரத்தி வருவேன்!*
*அழும் நேரத்தில் ஆறுதல் அளிப்பாய்!*
*தனிமையில் துணையாய் வருவாய்!*
*கேளாமல் என் கன்னத்தில் முத்தம் இடுவாய்!*
*சில வினாடிகளிலே வந்து செல்வாய்!*
*என் நெஞ்சுக்குள் தூறிக்கொண்டே இருக்கும்*
*உன்னுடைய அழகான நிமிடங்கள்!*
*நிற்காத அடைமழையாய் எனக்குள் வரும்போது*
*என் உள்ளமெங்கும் தென்றலாய் வீசும்!*
*மழையில் நனைந்து பனிக்கூழ்*
*உண்ணும்போது இறந்தாலும் இன்பமே!*
*மண்ணை அடைந்தவுடன் மண்வாசனையும்*
*இதமான காற்றும் அளித்து*
*சுவாசிக்கும் அனைவரையும்*
*நேசிக்கச் செய்து விடுவாய்!*
*என் தனிமையைத் தணிக்கச் செய்வாய்*
*மழையே! மழையே! மழையே!*

**ஆர்த்தி. வெ,**
பி.லிட்., முதலாமியாண்டு.

### கல்லூரி

*கல்லூரி என்பது நம் அறிவை வளர்க்கும் அறிவுமன்றம்*
*நம் திறனை அறியும் ஆராய்ச்சிமன்றம்*



*நம் திறமையை வெளிப்படுத்தக் கூடிய பட்டிமன்றம்*
*நமக்கு ஒழுக்கங்களைக் கற்றுத் தரும் நிலையம்*
*நாம் செய்யும் தவறுகளைத் திருத்தும் கல்விக்கூடம்*
*அத்தகைய கல்லூரியில் ஒழுக்கத்துடனும்*
*அறிவுடனும் இருந்து பார்!*
*வெற்றி மாலைகள் உன்னை வந்து சேரும்*
*உழைப்பில்லாமல் உயர்வு இல்லை*
*விதை இல்லாமல் வேர் இல்லை*
*வேர் இல்லாமல் செடி இல்லை*
*செடி இல்லாமல் பூக்கள் இல்லை*
*பூ இல்லாமல் காய் இல்லை*
*காய் இல்லாமல் கனி இல்லை*
*கனி இல்லாமல் சுவை இல்லை*
*தாய் தந்தை இல்லாமல் பிள்ளை இல்லை*
*உழைப்பில்லாமல் உயர்வும் இல்லை.*

### தனித்திரு! விழித்திரு!

*இந்தியனே!*
*உன்னைப் போல் திறமையானவன்*
*இவ்வுலகில் யாருமில்லை*
*நீ இல்லாத இடம்*
*இவ்வுலகில் எங்குமில்லை*
*இந்தியனே!*
*விழித்திடு! நீ கண் விழித்திடு*
*எதிரிகள் உன் காலடி தூசி என்று தட்டிவிடு*
*இந்தியனே!*
*சென்று போன நாட்களை நினைத்து வருந்தாதே!*
*இனி வரும் காலங்களை எண்ணி அஞ்சாதே!*
*இன்று நீ நற்செயல்களில் முனைந்திரு!*
*இந்தியனே!*
*நீ காந்தீய வழியோ*
*சந்திர போஸின் வழியோ பின்பற்றிடு.*
*இந்தியாவின் முன்னேற்றம் உன் கையில்.*
*அதன் பாதுகாப்பும் உன் கையில்*
*கண் விழித்துக் காத்திரு!*

உனக்கான சந்தர்ப்பம் உன்னை வந்தடையும்
இன்று உன் தேசத்திற்காக
உயிரைத் தியாகம் செய்ய முனைந்திடு
இந்தியா வாழ்க! வளரட்டும் பல்லாண்டு!
வந்தே மாதரம்!

**ஆத்திசூடி**

அறத்தில் சிறந்தவன் தர்மன்
ஆண்மையில் சிறந்தவன் பரசுராமன்
இன்பத்தை வென்றவன் பீ'மன்
ஈகையில் சிறந்தவன் கர்ணன்
உண்மையில் சிறந்தவன் அரிச்சந்திரன்
ஊக்கத்தில் சிறந்தவன் துருவன்
எவருக்கும் அஞ்சாதவன் அர்ச்சுனன்
ஏற்றத்தில் சிறந்தவன் கிருஷ்ணன்
ஐயமிட்டு உண்பவன் சிறு தொண்டன்
ஒழுக்கத்தில் சிறந்தவன் இராமன்
ஓதலில் சிறந்தவன் வசிஷ்டன்
ஔடதத்தில் சிறந்தவன் தன்வந்திரி

**நம்பிக்கை**

இயற்கையை நேசி
மழை வரும்
இதயத்தை நேசி
இன்பம் வரும்
உழைப்பை நேசி
உயர்வு வரும்
உன்னையே நேசி
உன்னொளி வரும்.

**எம். ஷர்மிளா,**
பி.காம்., முதலாமியாண்டு.

**வாழ்க்கையின் பரிமாணங்கள்**

கல்வி என்பது கசந்திடாக் கரும்பு
செல்வம் என்பது கரைசேர்க்கும் தோணி
உழைப்பு என்பது உயர்த்திடும் ஏணி
கடமை என்பது செயலாற்றும் திறமை
காலம் என்பது கடவுளின் நன்கொடை
நேர்மை என்பது நெஞ்சின் ஒழுங்கு
நட்பு என்பது அன்பின் ஆழம்
அன்பு என்பது ஆயிரம் பாசம்
உண்மை என்பது நன்மையின் உறைவிடம்
உரிமை என்பது பெருமையின் சின்னம்

**கு. சத்தியமூர்த்தி,**
எம்.எஸ்சி., இரண்டாமியாண்டு.

**கனவு**

இமைகளால்
விலங்கிட்ட போதும்
எப்படி விடுதலையானாய்

**சுயநலம்**

மரங்கள் மூச்சு விடுகின்றன
மனிதர்களுக்காக
மனிதன் மூச்சு விட்டான்
மரத்தின்
வேர்களை வெட்டிய களைப்பில்
மாடு வண்டி இழுத்து
துன்பப்படுவது
இன்னொரு மாட்டுக்காக இல்லை
மனிதனுக்காக!

**க. ரம்யா,**
எம்.எஸ்சி., இரண்டாமியாண்டு.

**எப்போது...?**

வெறும் வார்த்தை திருக்குறளாவது எப்போது?
சிறு கால்வாய் பெருங்கடலாவது எப்போது?
வெறுங்குடையும் வெண்கொற்றமாவது எப்போது?
கரகர சப்தம் சங்கீதமாவது எப்போது?

கட்டுமரம் கப்பலாவது எப்போது?
காட்டுச்செடி பெரும் தேக்கு ஆவதும் எப்போது?
சிட்டுக்குருவி வல்லூறாவது எப்போது?
சிறுகல் தூணாகும் அரண்மனையாவது எப்போது?
பள்ளிக்கூடம் பல்கலைக்கழகமாவது எப்போது? - ஒரு
முல்லைக்கொடி பிருந்தாவனமாவது எப்போது?

**அ. சங்கரி,**
எம்.எஸ்சி., இரண்டாமியாண்டு.

## தோழி

குட்டிக் குட்டிச் சண்டை
கோபமான பார்வை
சின்னச் சின்ன சிணுங்கல்
சித்திரம் போல் சிரிப்பு
அழகான பாசம்
அன்பான முத்தம்
அறிவான சிந்தனை
அமைதியான குணம்
இத்தனைக்கும் சொந்தக்காரி
உன்னை என் வாழ்வில் இருந்து
ஒருபோதும் தொலைக்கமாட்டேன்.

**ம. ரவி,**
பி.எஸ்சி., மூன்றாமியாண்டு.

## அப்துல் கலாம்

கிழக்கிலிருந்து வந்தாய்
வாழ்க்கையே கடல் என்றாய்
கனவு என்ற கப்பலில் மிதந்த
எங்களை உன் அலை போன்ற மனத்தால்
கனவைக் கலைத்து
உன் அறிவு என்ற கனவை
எங்களுக்குள் விதைத்து
அன்பு என்ற பண்பை விரித்து
அக்னிச் சிறகாய் வளர்த்து



நாங்கள் பறக்கும் போது
உன்னை மண்ணில் புதைத்து
உன்னைக் காண
விண்ணில் விடுகிறோம்
எங்கள் கனவை என்றும்
ஒரே தேசமாய்
நன்றி மாண்புமிகு கலாமே!!!

**ஜெ. ஜெயலட்சுமி,**
பி.எஸ்சி., மூன்றாமியாண்டு.

## அம்மா

அம்மா நீ அற்புதம்!
அம்மா! நீ என் அருகில் இருந்தால்
கற்பாறைகூட பஞ்சு மெத்தை தான்!
சொல்ல வந்ததைச் சரியாகச் சொல்ல முடியாமல்
தவித்து நின்று பார், தாய்மொழியின்
அருமை புரியும்!
வெளிநாட்டில் இருந்து பார் தாய்நாட்டின்
அருமை புரியும்!
அதுபோல் தாயை விட்டு தள்ளி இருந்து பார்
தாயின் அருமை புரியும்!
குழந்தையின் பல்வேறு அழுகைக்கு
அர்த்தம் புரிந்த ஒரே "அகராதி" நீ தானே அம்மா
அப்பா ஆடம்பரமாய்க் கட்டிக் கொடுத்த வீட்டை விட,
அம்மா உன் ஆடையில் கட்டிக் கொடுத்த
தொட்டில் வீடே நிம்மதியைத் தந்தது.
மண்ணறையில் உறங்கச் சொன்னால் கூட
உறங்குவேன் அம்மா!
நீ வந்து ஒரு தாலாட்டுப் பாடினால்!
அம்மா! நமக்கு என்னவெல்லாம் செய்தாள்
என்று நமக்குத் தெரிவதில்லை
அதை நாம் உணரும் போது அவள் நம்முடன்
இருப்பதில்லை.

**ரா. உமா,**
பி.எஸ்சி., மூன்றாமியாண்டு.

### மீண்டும் அமரமுடியாத சிம்மாசனம்

*உலகில் மீண்டும் அமரமுடியாத ஒரே*
*சிம்மாசனம் தாயின் கருவறை*
*உன்னையே மறந்தாலும் உன்*
*அன்னையை மறக்காதே.....!*

### காகிதம்

*கசக்கும்போது குப்பையாய்ப் பார்க்கிறோம்*
*வானில் பறக்கும் போது பட்டமாய்ப் பார்க்கிறோம்*
*தெருவில் கிடக்கும் காகிதமாய்*
*யாரையும் வெறுக்காதே,*
*நாளை அது பட்டமாகப் பறந்தால்*
*சற்று நிமிர்ந்துதான் பார்ப்போம்....!*

### வெற்றி

*வெற்றியை நினைத்தே நீச்சலடியுங்கள்*
*கடலளவு சோதனைகளும்*
*கடினமாகத் தெரியாது*
*விடியும் என்னும் எண்ணத்தோடு உறங்கிவிடு*
*முடியும் என்னும் எண்ணத்தோடு எழுந்துவிடு*
*இலட்சியத்தை அடைவாய்,*
*வெற்றி அடையக்*
*காலம் வரும்வரை காத்திரு*
*நீ வெற்றியடையும் காலம்தான்*
*உனக்குச் சிறந்த காலம்,*
*எட்டிப் பிடிக்கும் தூரத்தில் வெற்றி இல்லை,*
*அதை விட்டுவிடும் எண்ணத்தில்*
*நாமும் இல்லை*
*வெற்றி அடைய வாழ்த்துகள்!!!*

### நட்பு

*இலையுதிர் காலத்தில் மரம் சொல்கிறது*
*உறவை விட நட்பே உயர்ந்தது என்று!*
*உறவாய் இருந்த இலைகள் உதிர்ந்தாலும்*



*நட்பாய் வந்த பறவைக்கூடு மட்டும்*
*களையாமல் இருக்கிறது....!*

**ஆர். கஜலெட்சுமி,**
*பி.எஸ்சி., இரண்டாமியாண்டு.*

### கல்லூரி

*எமது கல்லூரி போல் வருமா?*
*எமது முருகன், பாலய சுவாமிகள் அருள்போல் வருமா?*
*நான் வருகையைத் தவறவிட்ட கல்லூரி நாட்களிலும்!*
*என், இருக்கையைச் சுற்றியே நொடிக்கு நொடி*
*என் மனது படையெடுப்பு நடத்துகின்றது!*
*நீ வாழும் என் மனது! என்னிரு விழிகள்!*
*உனைப் பற்றியே பேசுகிறது*
*என் நாட்குறிப்பின் எழுத்துக்களோடு*
*பூவுக்குள் புயலடிக்க*
*உணர்வுக்குள் உயிர்துடிக்க!*
*யாருக்குச் சொல்வது?*
*எப்படிச் சொல்வது?*
*காற்றேயில்லை பறக்கிறேன்!*
*நீரே இல்லை நீந்துகிறேன்!*
*கனவா? நனவா? தெரியவில்லை*
*இக்கல்லூரியின் மகிமை சொல்ல வந்து*
*ஓடிவந்து மூச்சிறைத்து நிற்கின்றேன்.*

**வீ. புவனேஸ்வரி,**
*பி.எஸ்சி., இரண்டாமியாண்டு.*

### வெற்றி

*ஒரு இலட்சியத்தை எடுத்துக் கொள்ளுங்கள்*
*அதையே உங்கள் வாழ்க்கையாக நினையுங்கள்!*
*அவற்றைக் கனவு காணுங்கள் - அந்த*
*இலட்சியத்திற்காகவே வாழுங்கள்!*
*உங்கள் உடலில் உள்ள ஒவ்வொரு பகுதியும்*
*அந்த இலட்சியத்தால் நிறையட்டும்!*
*பிற கருத்துக்கள் அனைத்தையும்*

அடியோடு விட்டு விடுங்கள்
வெற்றிக்கு இதுவே வழி!!!

## உன்னத உறவு

அன்பைத் தருவதில் தாயாக
அறிவைத் தருவதில் தந்தையாக
தெளிவுபடுத்துவதில் தெய்வமாக
துன்பத்தைப் போக்குவதில் தோழனாக
இருட்டில் இருக்கும் எனக்கு ஓர் வெளிச்சமாக
என்றும் வாழ்நாளில் துணையாக
இருக்கும் ஓர் உயிர் அம்மா!!!

**அ. சிவரஞ்சனி,**
பி.எஸ்சி., இரண்டாமியாண்டு.

## தாய்

விரல்கள் என்னைத் தட்டிச்சென்றும்
நான் எழவில்லை
அந்தச் சுகமான உறக்கத்தைத்
தங்கத் தொட்டிலும் தரவில்லை
அதை என் தாய்மடி தந்தது
பல வரங்களை அளித்த என்தாய்
என்னைவிட்டுப் பிரியும்போது
நான்கடவுளிடம் வேண்டியது
என்தாய் எனக்கே மீண்டும்
அன்னையாக வேண்டும் என்று....

## அழகு

வயலுக்கு அழகு செழுமை
வாளுக்கு அழகு கூர்மை
பாட்டுக்கு அழகு இனிமை
ஆசிரியருக்கு அழகு ஆற்றல்
நண்பனுக்கு அழகு பொறுமை
குழந்தைக்கு அழகு குறும்பு...



## சங்கீதம்

புல்லாங்குழல் இல்லாமலேயே
நாத இன்பம் தொட்டிலில்
மழலையின் அழுகை.

**க.லலிதா,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

## வறட்சி

வறட்சியைக் கண்டு
மிரட்சியில் உள்ளான் விவசாயி
வண்ண வண்ணக் குடங்கள்
சந்தோஷமாய் வீதியின் நடுவில்
குடங்களின் சங்கீதம் போல்
தண்ணீர் சண்டை
மனிதர்களின் கண்ணீர்த் துளிபோல்
குடத்தில் விழும் நீர்த்துளி.

## கனவுகள்

கனவுகள் சுகமானது என்பது எல்லோருக்கும் தெரியும்
ஆனால் அந்தக் கனவுகள் கனமானது என்பது
சுமப்பவர்களுக்கு மட்டும் தான் தெரியும்.

**யு. பவித்ரா,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

## மழை

அனுமதி கேட்கவும் இல்லை
அனுமதி பெறவும் இல்லை
வலுக்கட்டாயமாக ஒரு முத்தம்
மண்ணில் மழைத்துளி!

**எ. விஷ்ணுபிரியா,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

### பள்ளிக்கூடம்

கருப்பஞ்சாறாம் கல்விதனில்
வானம் முட்டும் பட்டமதில்
சீறுடை அணிந்த சின்னப் பயணம்
வேற்றுமை அழித்த வேடந்தாங்கல்
மதங்கள் இணைந்த மாணவர்க்கூட்டம்
நித்தம் நித்தம் அறிவை ஊட்டும்
பள்ளிப் பருவத்தில்
அறிவு ஆற்றல் வளர்த்திடு
துணிவு இருக்கு உணர்ந்திடு
கற்றல் அதற்குத் துணையாகும்
பேதைமை ஏற்றி மதிதனைத் தொலைத்தால்
பாதை மாறி பயணம் செல்லும்
தாவணிக் கனவில் தாகம் இருக்கும்
நனவாக்க முயன்றால் வாழ்வு சறுக்கும்
முயற்சி இருந்தால் நீதான் வெல்வாய்
தடைகள் தாண்டி நடைகள் போடு
சுவரை எழுப்பிச் சித்திரம் போடு.

### காற்று

எங்கு எதை தொலைத்ததோ
தெரியவில்லை?
யார் கண்ணுக்கும்
தெரியாமல்
எதையோ தேடி
தினமும் திரிகிறது!..
"காற்று".

### அழகிய தருணங்கள்

கதிரவன் பார்வைபட்டு
வெண்பஞ்சு மேகங்கள்
பொன்வண்ணம் சூடியது!
அந்தி சாயும் வேளையில்
மேகத்தின் விளிம்பில்
பொன்மின்னல் வெட்டியது!



பொழுது சாயும் நேரத்தில்
செந்நிறத்தைத் தெளித்து
சிறுகச் சிறுக மறைகிறான்
மாலைநேரக் கதிரவன்!

**எ. எழிலரசி,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

### அண்ணன்

ஐந்து வயதில் அன்பு தெரியவில்லை
பத்து வயதில் பாசம் தெரியவில்லை
எல்லாம் தெரிந்த வயதில்
நீ என் பக்கத்தில் இல்லை!

### காற்று

காற்று கூட கோபம் கொண்டது
சுவாசிப்பது என்னை!
நேசிப்பது உன் நண்பனையா? என்று...

**ஏ. திவ்யா,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

### புன்னகை

மற்றவர்களைக்
காயப்படுத்தும்
புன்னகையை விட....
யாரையும்
காயப்படுத்தாத
மௌனம் சிறந்தது

### சோகம்

சோகங்கள் கண்ணீரில் மட்டும்
மறைந்திருக்காது
வாய்விட்டு சிரிக்கும்
பலரின் பொய் சிரிப்புகளிலும்
மறைந்திருக்கும்.

## அன்பு

உலகில் உண்மையான அன்புக்குக்
கிடைக்கும் மிகப்பெரிய பரிசு
கண்ணீர்த்துளிகள்!...

**எம். திவ்யா,**
பி.சி.ஏ., மூன்றாமியாண்டு.

## பெண்மை

அவள் ...
அகத்தில் மென்மையானவள்
புறத்தில் இனிமையானவள்!
அவள்....
நடையோ நளினம்...
நடனமும் நளினம்!
அவள்....
பேச்சிலும் வஞ்சம் இல்லை...
அவளும் வஞ்சகி இல்லை!
அவள்....
பேசினாலோ அடைமழை...
அதுயாரையும் அடித்துச் செல்லாது!
இறகைவிட இலேசான
கூந்தல் கொண்டவள்....
இரும்பை விட பலமான
அன்பு உடையவள்!
ஆயிரம் அர்த்தங்கள்
உள்ளது அவள் விழியில்...
அதை எப்படிச் சொல்வேன்
எந்தன் மொழியில்!
அவளை வர்ணிக்க வார்த்தைகளோ தீராது...
வர்ணித்தால் வருடங்களோ போதாது!
கவிதை எழுதி பெண்மையைச்
சிறப்பிக்கவில்லை...
பெண்மையை எழுதி கவிதையைச் சிறப்பிக்கிறேன்.

**எம். விஜியலட்சுமி,**
பி.சி.ஏ., முதலாமியாண்டு.



## சிகரம் தொடு

நடக்க முயன்று நீ காலடி பதித்தால்
தூரம் ஒன்றும் தடையல்ல
கடக்க முயன்று நீ வல்லமை கொண்டால்
ஆழ்கடல் ஒன்றும் ஆழமல்ல!
பறக்க முயன்று நீ சிறகை விரித்தால்
வானம் ஒன்றும் பெரிதல்ல
இங்கு எல்லா எதிர்ப்புகளுமே
தோல்வியைக் கண்டு துவண்டுபோகும் செயல்களே
தெரிந்து நாமும் செயல்படுவோம்
தெளிவாய் இருந்து பயன்படுவோம்
வீரனுக்குத் தேவை தெளிவு
நன்மக்களுக்குத் தேவை பணிவு
வாழாதே மக்களை வெறுத்து
வாழ்க்கை உயரும் எண்ணத்தைப் பொறுத்து - இவ்
வார்த்தையே எந்தன் மனத்தின் கருத்து!

**சீ. காமாட்சி,**
பி.சி.ஏ., முதலாமியாண்டு.

## அன்னை

தாய்மையின் வலி
என்னவென்று எனக்குத் தெரியும்
அதனால்தான் அன்று
அம்மாவுடன் சேர்ந்து நானும்
அழுதேன்
“நான் பிறக்கையில்”
மின்னல் மின்னும்போது அம்மாவைக்
கட்டி அணைக்கும்
குழந்தைக்குத் தெரிகிறது
“அம்மா அதைவிடப் பெரிய சக்தி”
என்று
உயிர் எழுத்தில் “அ” எடுத்து
மெய் எழுத்தில் “ம்” எடுத்து
உயிர்மெய் எழுத்தில் “ம” எடுத்து

அழகுத் தமிழில் கோர்த்தெடுத்த முத்து
"அம்மா"

## அப்பா

பல தடவை அம்மா
சொல்லிக்காட்டியிருப்பார்கள்
பத்து மாதம் சுமந்த கதையை
ஆனால் ஒரு முறை கூட
அப்பா சொல்லிக்காட்டியதில்லை
வாழ்க்கை முழுவதும்
சுமக்கும் கதையை

**எம். வினிதா,**
பி.ஏ., மூன்றாமியாண்டு.

## பெண்

பெண்ணே! நீ
வாடும் மலராக இருக்காதே,
வளம் தரும் மரமாக இரு....

பெண்ணே! நீ
உடையும் மண்பாண்டமாக இருக்காதே,
உறுதியான மலையாய் இரு....

பெண்ணே! நீ
கண்ணைக் கசக்கும் துன்பமாக இருக்காதே,
கண்ணைக் கவரும் புன்னகையாய் இரு...

**ஆர். சுதாகர்,**
பி.ஏ., மூன்றாமியாண்டு.

## என் தாய்

கருவறையில்
என்னைச் சுமந்தவள் - என் தாய்!
கருவறையிலிருந்து வெளியுலகிற்கு
என்னை அழைத்து வந்தவளும் - என் தாய்!
அழைத்து வந்து இரத்தத்தைப்



பாலாகக் கொடுத்தவளும் - என் தாய்!
பால் போன்ற மேனியைப் பஞ்சணையில் போட்டு
தாலாட்டுப் பாடியவளும் - என் தாய்!
தாலாட்டு என்னும் தாய்மை உணர்வில்
என்னை நனைய விட்டு
அன்பை ஊட்டியவளும் - என் தாய்!
அன்பு என்னும் மழையினால் என்
அறிவை வளர்த்தவளும் - என் தாய்!
என் தாயை வணங்குவதில்
நான் பெருமை கொள்கிறேன்.
அவளுக்கு என்றும் என் முதல் வணக்கம்...

**ஏ. அஜித்குமார்,**
பி.ஏ., மூன்றாமியாண்டு.

## கற்றுத் தருவது

பள்ளி நட்பு பண்பைக் கற்றுத்தரும்
கல்லூரி நட்பு கனவைக் கற்றுத்தரும்
குழந்தை நட்பு குணத்தைக் கற்றுத்தரும்
இளமை நட்பு இன்பத்தைக் கற்றுத்தரும்
முதியோர் நட்பு முன்னேறக் கற்றுத்தரும்
ஆசிரியர் நட்பு அனுபவத்தைக் கற்றுத்தரும்
பொய்யான நட்பு பொறாமையைக் கற்றுத்தரும்
உண்மையான நட்பு உயிரையும் கொடுக்கக் கற்றுத்தரும்
நல்லவரின் நட்பு நம்பிக்கையைக் கற்றுத்தரும்
தமிழிரின் நட்பு தலைநிமிர்ந்து வாழக் கற்றுத்தரும்.

**இ. ஒலியா,**
பி.ஏ., மூன்றாமியாண்டு.

## நண்பன்

குன்றாத மலை
வற்றாத சுனை
பாசத்தில் தாய்
கண்டிப்பில் தந்தை
சூதும் வாதும்

இல்லா மனம்
இவையெல்லாம் சேர்ந்ததோர்
கலவை உற்ற நண்பன்
கொடை வள்ளல்
அவன் தரும் கொடை 'நட்பு'
அள்ளிக் கொடுப்பினும்
குன்றாத அமுதசுரபி

## பிறந்தநாள்

நீ அழுவதைப் பார்த்து
உன் அம்மா சிரித்த
ஒரே ஒரு நாள்
உன் பிறந்தநாள்...

**ச. பிரியங்கா,**
பி.ஏ., இரண்டாமியாண்டு.

## ஓவியம்

கடல் கடந்து சென்றேன்
கவிதைகள் பல படைத்தேன்
வரலாற்றில் இடம் பிடித்தேன்
காவியங்கள் பல படித்தேன்
ஆனால்
ஒரே ஒரு ஓவியத்தை மட்டும் இழந்தேன்...
அதுதான் என் தாயின் முகம்...

**மு. ஆர்த்தி.**
பி.ஏ., இரண்டாமியாண்டு.

## ஜல்லிக்கட்டு வெற்றி

தூங்கிக் கிடந்த தமிழன் வீரம்
துள்ளிக் குதித்த நேரமது...!
தூசி படிந்த தமிழன் மானம்
தூய்மையான காலமது...!
ஓங்கி ஒலித்த தமிழன் சத்தம்
ஒசோன் தாண்டியும் கேட்டது...!



ஒன்றுபட்ட தமிழினம் கண்டு
உலகமே வியந்து போனது....

**சு. சுகன்யா,**
பி.ஏ., இரண்டாமியாண்டு.

## ஒருவர் நட்பில் ஒருவராய்

கண்ணுக்குத் தெரிவதில்லை
இதன் தன்மை
சிக்கிவிட்டால் மீள்வது கடினம்
அப்படியோர் பொல்லா மண் உண்டு
அதுவே புதை மண்
வாழ்வில் சிலர்
இப்படித்தான் தீயோர் சேர்க்கையில்
தீய நட்பு வளர்த்து
அதில் சிக்குண்டு துன்பத்தில் உழன்று
மீள முடியாது போவார் - ஆதலால்
நல்லோர் யாரென்று அறிந்து சேர்ந்தால்
நல்ல நண்பர் கிடைப்பார்
நலம் தரும் நட்பும் வந்து சேர்ந்திடும்
இன்பமெல்லாம் பயக்க இனிதாய் வாழ்ந்திட
ஒருவர் நட்பில் ஒருவராய்.

## வாழ்க்கை

வாழ்வென்னும் நாடகந்தனில்
விதி எழுதும் வசனத்தில்
பிழைதனை மதி கொண்டு
திருத்துகிறேன்
என் வாழ்வைப் பற்றி யாரும்
வசை பாடிவிடக் கூடாதென்று...!

## நட்பு

சிறகுகள் இல்லாத பறவையின் வாழ்க்கையும்
நண்பர்கள் இல்லாத மனிதனின் வாழ்க்கையும்
அர்த்தம் இல்லாத வாழ்க்கை.

**பா. சிவப்பிரியா,**
பி.ஏ., இரண்டாமியாண்டு.

## காக்கும் கடவுள்

மெழுகுவர்த்தி தன்னை
அழித்துக்கொண்டு
பிறருக்கு ஒளி கொடுக்கும்
கற்கள் தன்னை வருத்திக் கொண்டு
சிலையாகக் காட்சியளிக்கும்
அதுபோலத் தான் தாய் என்பவள்
தன்னைக் காயப்படுத்திக் கொண்டு
பிள்ளையைக் காக்கும் கடவுளின்
உருவமாய்த் திகழ்வாள்.

## குழந்தை

புன்னகைப் பூக்களை வீசி ஒவ்வொரு
நொடிகளும் என்னை மயக்கும்
உன் மென்மையான இதழ்களைப்
பார்க்க ரோஜா தவம் இருக்கும்
உன் அழகிய மேனியைத் தொட
தென்றல் ஓடி வரும்
உன் அழகைக் கண்டு வெண்ணிலா
வெட்கப்படும்
உன் மொழியைக் கேட்டால்
கிளிகள் வியந்துவிடும்.
உன் கண்களைக் கண்டால்
மீன்கள் மயங்கி விடும்.

**ரா. அனிதா,**
பி.ஏ., இரண்டாமியாண்டு

## தாயன்பு

சின்னச் சின்ன
தவறுகள்
தெரிந்தேதான்
செய்கிறேன்... என்னை
திருத்தப் போவது
தாய் என்பதால்
கண்ணில் பட்ட கவிதையே
உன்னை வாசித்து
வாசித்தே
கவிதைக்காரி
ஆகிவிட்டேன்.
நான் தூரமாகிப் போன
பின்னரே
அருகிலிருக்கிறது
தாயின் அன்பு.
நிறம் நிலை
இடம் இனம்
பணம் பகட்டு
பார்ப்பதே இல்லை
தாயின் உள்ளம்
வீரம் வேண்டாம்
ஈரம் போதும்
பேரம் வேண்டாம்
நேரம் போதும்
பணம் வேண்டாம்
குணம் போதும்
துன்பம் நானெனினும்
காலம் கடந்து வாழ(நம்)
தாய், மகள்
உறவு போதும்

## ஆசிரியர்

ஆசிரியர்களின் அருகில்
அமர ஆசை
அவர்கள் முன்னால்
அல்ல
அவர்களின் பின்னால்
மாணவனாக.

**அ.தேவிபாலா,**
பி.ஏ., இரண்டாமியாண்டு.

## ஆதாரம்

*எந்த ஒரு மனிதனாலும் திரும்பப் பெற*
*முடியாத சிம்மாசனம் தாயின் கருவறை!*
*உலகமே வந்தாலும் உறவினர்கள் நின்றாலும்*
*உனக்கது ஈடாகுமா அம்மா!*
*கற்களால் செய்த சிலையைவிட*
*கருவில் சுமந்த தாயே தெய்வம்*
*சூரியன் தோன்றி மறைவது - கடலில்*
*ஆனால் மனிதனின் மறைவிடமோ தாய் மண்ணில்!*
*உன்னோடு இல்லா வாழ்க்கைப் பயணம்*
*உன் நினைவுகளோடு அம்மா!*
*விண்ணில் ஆயிரம் விண்மீன்கள் இருந்தாலும்*
*விண்ணிற்கு அழகு நிலா!*
*மண்ணுக்கு ஆதாரம் மலைகள்*
*எனக்கு ஆதாரம் என் 'தாய்'!*
*உன் மடியில் உறங்க ஆசைதான்!*
*உறங்கும் வரை அல்ல*
*என் உயிர் பிரியும் வரை!*
*கலையாத மேகம் இல்லை!*
*கனவு இல்லாத உறக்கமில்லை*
*பிரியாத உறவு இல்லை!*
*ஆனால் தாயே!*
*நான் உன்னை நினைக்காத நேரமே இல்லை!*
*மீண்டும் ஒரு ஜென்மம்*
*இருப்பது நிஜமானால்*
*நீ மட்டும் எனக்குப் போதும்*
*உறவாக அல்ல உயிர் தரும் தாயாக!*

**ஆர். ரம்யா,**
*பி.ஏ., இரண்டாமியாண்டு.*

## உயிருக்குள் உயிராய்

*கண்ணுக்குள்*
*கனவாய் இருப்பது*
*நெஞ்சுக்குள்*
*நிலவாய் இருப்பது*



*மனதிற்குள் மலராய் இருப்பது*
*ஆனால் - என் உயிருக்குள்*
*உயிராய் இருப்பது*
*என் நட்பு மட்டுமே!!!*

## திருமண உறவு

*பத்து ப் பொருத்தங்களைப் பார்த்து*
*ஒன்பது கோள்களை அறிந்து*
*எட்டுத் திசையிலிருந்து உறவை அழைத்து*
*ஏழு அடி எடுத்து வைத்து*
*அறுசுவை உணவு உண்டு*
*பஞ்ச பூதங்கள் சாட்சியாக*
*நான்கு வேதங்கள் முழங்க*
*மூன்று மூடிச்சுகளால்*
*இரு மனங்களும் ஒன்று சேரும்*
*ஓர் உறவு தான்ஞ்*
*திருமண உறவுஞ்!*

**எம். ஸ்ரீமதி,**
*பி.ஏ., இரண்டாமியாண்டு.*

## தாயின் உன்னதம்

*கருவில் இருந்த போது*
*எட்டி உதைத்தேன்*
*வெளி வந்த உடன்*
*நீ கொடுத்த முதல் முத்தம்*
*அந்த முத்தம் எதற்கும்*
*நிகர் ஆகாது*
*நான் பேசும் மழலைப் பேச்சை*
*நீ இரசித்துக் கேட்டாய்*
*உலகிலேயே யாரும் நம்மீது*
*வைக்க முடியாத அன்பு*
*என்றும் அழிக்க முடியாத*
*உறவு*
*அதுதான் தாயின் உறவு*

**என். பொன்எழில்,**
*பி.ஏ., இரண்டாமியாண்டு.*

## முயற்சி

*முயற்சி என்பது உன் வாழ்வின் முதற்படி*
*முயற்சியே உனக்கு முதல் ஏணிப்படி!*
*முடியாது என்பது மூடத்தனம்*
*முடியவே முடியாது என்பது முட்டாள்தனம்!*
*முன்னேறுபவன் யாராக இருக்கட்டும்.*
*முயல்பவன் நீயாக இரு!*
*மனனே விழித்தெழு*
*மனம் இறந்தால் மார்க்கம் உண்டு!*
*மண்ணை உழு*
*மாநிலம் உன்னைப் போற்றும்!*
*முயல்பவனே முன்னேறுவான்*
*முடங்கிக் கிடப்பவன் பின்னேறுவான்!*
*முயல்பவனே இறந்தும் வாழ்பவன்.*
*முடங்கிக் கிடப்பவன் வாழ்ந்தும் இறந்தவன்!*
*முயற்சி செய் வெற்றி பெற*
*முயற்சி பயிற்சி தரும் தோல்வியிலிருந்து*
*வெற்றி பெற!*
*முயற்சி செய்*
*முயற்சி பயிற்சி தரும்!*
*முயற்சி செய்*
*முயற்சி வெற்றியைத் தரும்!*

**எஸ். திவ்யா,**
பி.ஏ., முதலாமியாண்டு.

## நட்பு

*நினைத்தவுடன் மழை*
*இரவு நேர மெல்லிசை*
*கள்ளமில்லாச் சிரிப்பு*
*பொய்யில்லா நட்பு*
*மீண்டும் ஒரு பள்ளிப் பருவம்*
*தோள் சாய தோழி*
*உயிர் கொடுக்கும் தோழன்*
*தாய் மடி தூக்கம்*
*தூக்கத்தில் மரணம்*
*மரணம் வரை உங்கள் நட்பு!*

**இ. பாமாஸ்ரீ,**
பி.ஏ., முதலாமியாண்டு.

## விடாமுயற்சி

சின்னஞ்சிறு இதயம் அதில் சிறகடிக்கும் கனவுகள்
அத்தனையும் நிறைவேறும் உறுதியுடன்
விடாமுயற்சி இருந்தால்
வேதனைகளும் சாதனைகளாய் மாறும்
விதையைப் போடு நாளை
விருட்சமாய் மாறும்.

## வாழ்க்கை

விதைக்குள்ளே இருந்துவிட்டால் வெளியேறாது ஆலமரம்
உனக்குள்ளே இருந்துவிட்டால் வீணாகும் உந்தன் திறம்
திடமான முடிவெடு திறமையுடன் முன்னேறு
கடின உழைப்பைக் காணிக்கையாக்கு
வருங்காலம் உன்னோடு
வசந்தகாலம் உன் வாழ்க்கையோடு.

**என். தெய்வானை,**
பி.ஏ., முதலாமியாண்டு.

## சுதந்திரத்தால் தணிந்த தாகம்

வசந்த பூக்கள்,
தியாக தீபங்கள்,
அக்கினியின் சிறகுகள்,
பூமியின் பிரளயங்கள்,
விசுவ ரூபங்கள்,
வியர்வை நதிகள்,
இருட்டின் ஆத்மாக்கள்,
ஆத்மாவின் ராகங்கள்,
சுதந்திரத்தால் தணிக்கப்பட்ட தாகங்கள்!

**ஏ. சரிதா,**
பி.ஏ., முதலாமியாண்டு.

## படித்ததில் பிடித்தது

### அப்துல்கலாம்

கனவு காணுங்கள்
ஆனால் கனவு என்பது
நீ தூக்கத்தில் காண்பது அல்ல
உன்னைத் தூங்க விடாமல்
பண்ணுவது எதுவோ
அதுவே(இலட்சிய) கனவு...

அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள், அது உங்கள்
கடமையைப் பாழாக்கி விடும்.
கடமையைப் பற்றி கனவு
காணுங்கள் அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்.

“வாழ்க்கையில் வெற்றி பெற
வேண்டுமானால்
நல்ல நண்பர்கள் தேவை”
“வாழ்நாள் முழுவதும்
வெற்றி பெற வேண்டுமானால்
ஒரு எதிரியாவது தேவை”

**மு. சீத்தா,**
பி.எஸ்சி., மூன்றாமியாண்டு.

### வாழ்க்கை

ஒரு சந்தர்ப்பம் - நழுவ விடாதிருங்கள்
ஒரு கடமை - நிறைவேற்றுங்கள்
ஒரு இலட்சியம் - சாதியுங்கள்
ஒரு சோகம் - தாங்கிக் கொள்ளுங்கள்
ஒரு போராட்டம் - வென்றுகாட்டுங்கள்
ஒரு பயணம் - நடத்தி முடியுங்கள்

பெண்கள் இருக்கும் வீடு
அழகான தேவதைகள்



இருக்கும் வீடு.

“ஒருமுறை வந்தால் கனவு
இருமுறை வந்தால் ஆசை
பலமுறை வந்தால் அது இலட்சியம்”

**ஜெ. கலைச்செல்வி,**
பி.எஸ்சி., மூன்றாமியாண்டு.

### அம்மாவின் ஆசை

என் கல்லறை மேல் உன் பெயரை
எழுதிவை நினைப்பதற்கு அல்ல
அங்கும் உன்னைச் சுமப்பதற்கு

### நேரம்

துன்பத்திலும் இன்பத்திலும் நினைவில்
கொள்ள வேண்டிய ஒரே விஷயம்,
இந்த நிமிடம் நிரந்தரமில்லை என்று

### வெற்றி

உறுதியைப் போல் உழைப்பும் இருந்தால்,
நிச்சயம் வாழ்வில் வெற்றி காண்பாய்.

### கண்ணீர்

கண்ணீரைத் துடைக்கத் தெரிந்தால் மட்டுமே
தடைகளும், துன்பங்களும் உடையும்!
கண்ணீரில் எந்தக் கவலையும் கரைவதில்லை!
உங்கள் வலிமையைப் பெருக்கிக் கொள்ளுங்கள்:
எதிரிகள் தானாகவே மறைந்து போவர்.

### சாதனை

வாழ்க்கையில் சாதனை படைத்தேன் என்பதை விட
யாரையும் வேதனை படுத்தவில்லை
என்பதே சிறந்த சாதனை...!

**ஆர். கஜலெட்சுமி,**
பி.எஸ்சி., இரண்டாமியாண்டு.

# சிறுகதைகள்

## பணம்

ஒரு ஊரில் சுந்தர் என்ற இளைஞன் வாழ்ந்து வந்தான். அவனது தந்தைக்கு மகன் நன்றாகப் படித்து நல்ல வேலைக்குச் சென்று மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்ற ஆசை. ஆனால் சுந்தரோ படிப்பில் நாட்டமின்றி ஊர் சுற்றிக்கொண்டு வீண் அரட்டை அடித்துக்கொண்டு வெட்டியாக நாட்களை நகர்த்தி வந்தான். பின்னர் பள்ளிக்குச் செல்வதையே விட்டுவிட்டான். நாள்தோறும் ஊர்சுற்றிய மகனைக் கண்ட தந்தை அவனை நன்கு அடித்துவிட்டார். அதனால் ஊரை விட்டே ஓடிப்போனான் சுந்தர். பிரிந்துசென்ற மகனை எண்ணி பெற்றோர் பல வருடங்களாய் வருந்தியிருந்தனர். அந்த வருத்தமே தந்தைக்கு எமனாக மாறியது. தாயும் மிகவும் சிரமப்பட்டு கூலி வேலை செய்து பிழைத்து வந்தாள்.

பதினைந்து வருடங்களுக்குப் பின் சுந்தர் மீண்டும் தன் குடும்பத்தினரைக் காணவந்தான். வீட்டிற்கு வந்த மகனைக் கண்ட தாய் கண்ணீர்விட்டுக் கதறி அழுதாள். எங்கள் மீதிருந்த கோபம் தீர இத்தனை வருடங்கள் ஆகிவிட்டதா? அப்பாவின் சாவிற்குக்கூட வரவில்லையே என்று அழுதாள். மருமகளையும், மகனையும் வரவேற்று சாப்பாடு கொடுத்து நன்கு உபசரித்தாள். இவ்வளவு நேரமும் சுந்தர் எதுவும் பேசாமல் அமைதியாக இருந்தான். ஒரு மணி நேரம் கழித்துத் தன் அம்மாவிடம் அப்பா இறந்ததுக்கு அரசாங்கத்திலிருந்து இரண்டு இலட்சம் ரூபாய் பணம் கொடுத்தார்களே அதைப் பத்திரமாக வைத்திருக்கிறாயா? என்று கேட்டுவிட்டு, நீ இனிமேல் தனியாக இருந்து வருந்த வேண்டாம். எங்களோடு ஊருக்கு வந்து தங்கிவிடு. நாம் எல்லோரும் ஒன்றாக ஒரேவீட்டில் வாழலாம். எல்லோரிடமும் சொல்லிவிட்டு வா, நாளைக்கு ஊருக்குச் செல்லாம் என்றான்.

அப்பா இறந்ததற்குக் கொடுத்த பணத்தை நான் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன் என்றாள் தாய். உடனே சுந்தர் சரி எனக்குத் தூக்கம் வருகிறது. எதுவாக இருந்தாலும் காலையில்

பேசலாம் என்றான். தூங்கி எழுந்து பார்த்தால் மகனும், மருமகளும் அங்கு இல்லை. பின்னர்தான் புரிந்தது. இருவரும் சொல்லிக்கொள்ளாமல் ஊருக்குச் சென்றது. அப்படியென்றால் மகன் நம்மைப் பார்க்க வரவில்லை. இரண்டு லட்சம் ரூபாய் பணத்தை வாங்கிக் கொள்ளத்தான் வந்தான் எனப்புரிந்தது தாய்க்கு.

உடனே அவள் ஒருவரிடம் கொடுத்து வைத்திருந்த இரண்டு இலட்சத்தை வாங்கிக்கொண்டு அனாதை இல்லத்திற்குச் சென்றாள். அங்குப் படிக்க ஆசையிருந்தும், பணம் இல்லாமல் கல்வி பயில இயலாத குழந்தைகளுக்குப் பணத்தைக் கொடுத்து உதவ முடிவு செய்தாள். கணவன் மூலமாகக் கிடைத்த பணத்தை அவரின் விருப்பப்படியே செலவழிப்பதில் அவளுக்கு அளவற்ற திருப்தி!

**மை. பாரதி,**
பி.லிட்., மூன்றாமியாண்டு

## வழிகாட்டிய ஆசான்

நான் புதூர் கிராமத்தில் உள்ள அரசுப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். படிப்பில் பெரிதாக நாட்டம் இல்லை. பெற்றோர் எப்போதும் சரளாவைப் பார் எப்படிப் படிக்கிறாள், சத்யாவைப் பார் எப்படிப் படிக்கிறாள் என்று அடுத்தவரைப் பற்றியே பேசிக்கொண்டு இருப்பார்கள். எனக்கு அப்போது வருத்தமாக இருக்கும்.

ஒருநாள் பள்ளியில் இரண்டாவது மணிநேரம் ஆங்கில ஆசிரியர் சந்திரா உள்ளே வந்தார். அனைவரும் எழுந்து காலை வணக்கம் சொன்னோம். அவர் என்னிடம் கேள்வியொன்று கேட்டார். நான் பதில் சொல்லாமல் நின்றேன். என்தோழிகள் என்னைப் பார்த்து கேலியாகச்சிரித்தார்கள். ஆசிரியர் அவர்களை அமைதிப்படுத்தி உன்னால் முடியும் நீயும்படி எதையும் சாதிக்கலாம் என்றார்.

நானும் என்னால் முடிந்தவரை முயற்சி செய்தேன். அரசு பொதுத் தேர்வும் வந்தது. என்னுடைய தாய்,தந்தை என்னை நம்பவில்லை. சத்யாவைப் பார் தேர்வுக்கு எப்படிக் கிளம்பிவிட்டாள் என்றே சொன்னார்கள். ஆனால் என் ஆசிரியர் உன்னால் முடியும் நீ தேர்வில் வென்று வருவாய் என்று சொன்ன வார்த்தைகள் காதில் ஒலித்துக்கொண்டே இருந்தது.



நானும் அனைத்துத் தேர்வுகளையும் முடித்தேன். நான் தேர்வில் வெற்றிபெறுவேன் என்று குடும்பத்தில் யாரும் நம்பவில்லை. சில நாட்களுக்குப் பிறகு தேர்வு முடிவுகள் வெளியாயின. என்னாலும் நம்பமுடியவில்லை. பள்ளியில் மூன்றாவது இடத்தைப் பிடித்திருந்தேன். பெற்றோர் மிகவும் பூரித்துப் போயினர். சரளா,சத்யாவை விட அதிக மதிப்பெண்கள் பெற்றிருந்தேன். என் ஆசிரியர் மகிழ்ந்தார். என் வெற்றிக்கு என் ஆசிரியர்தான் காரணம் என்பேன். பெற்றோரே நம்பாத என்னை, ஆசிரியர் நம்பினார்.

அவரின் நம்பிக்கைக்கு ஏற்றது போல அதே பள்ளியில் பதினோறாம் வகுப்பும் பயின்று தேர்ச்சி பெற்றேன். பன்னிரெண்டாம் வகுப்பிலும் ஆசிரியரின் தூண்டுதல் எனக்கு மிகுதியும் உதவியாக இருந்தது. அதன்காரணமாகப் பன்னிரெண்டாம் வகுப்பிலும் முதல் இடத்தைப் பிடித்தேன். அதைக்கண்டு ஆசிரியரும், பெற்றோரும் மகிழ்ந்தனர்.

**ச.காயத்ரி,**
பி.லிட், இரண்டாமியாண்டு

## நட்பு

இரண்டு நண்பர்கள் உயிருக்கு உயிராகப் பழகினார்கள். அவர்களில் முருகன் என்பவன் பணக்காரனாக இருந்தான். மற்றொருவன் சங்கர், அவன் எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவன். சங்கர் துன்பத்தில் இருந்தபோது எல்லாம் முருகன் உதவிசெய்தான். அவனுக்குத் தேவையான உணவு, உடை போன்றவற்றையும் வழங்கினான். மேலும் அவர்களின் நட்பு அன்புடன் தொடர்ந்தது.

இப்படி இருந்தபோது ஒருநாள் இருவரும் பாலை வனத்திற்குச் செல்வதாக முடிவு செய்தார்கள். இருவரும் அவர்களுக்குத் தேவையான உணவு, தண்ணீர் போன்றவற்றை எடுத்துக் கொண்டு சென்றார்கள். கடுமையான வெயில் காரணமாக அவர்கள் மிகவும் தவித்துப் போனார்கள். சங்கர் எடுத்துச் சென்ற

உணவு, தண்ணீர் தீர்ந்துவிட்டது. முருகனிடம் மட்டும் கொஞ்சம் தண்ணீர் இருந்தது. இருவருக்கும் கடுமையான தண்ணீர் தாகம் ஏற்பட்டது. குறைவான தண்ணீர் மட்டும்தான் இருந்தது.

முருகன், நான் கொண்டுவந்த தண்ணீரை உனக்குஏன் கொடுக்க வேண்டும் எனக்கேட்டான். சங்கர் மிகவும் வருந்தினான். இருவருக்கும் சண்டை ஏற்பட்டது. இருவரும் பிரிந்து ஆளுக்கு ஒருபுறமாகச் சென்றார்கள். சங்கர் மிகுந்த வருத்தத்துடன் தன் நண்பன் தன்னிடம் இப்படிக் கூறியதை எண்ணிக்கொண்டே வந்தான். அப்போது மணலில் சங்கர் இன்று நானும் என் நண்பனும் சண்டைபோட்டுக் கொண்டோம் என எழுதிவைத்தான்.

முருகனிடமிருந்த தண்ணீரும் தீர்ந்துவிட்டது. இருவரும் மிகுந்த தாகத்துடன் ஆளுக்கு ஒருபுறமாகத் திரிந்தார்கள். இறுதியாக சங்கர் ஒரு குட்டையில் ஒருவர் மட்டும் குடிக்கும் அளவிற்குச் சிறிது நீர் இருந்ததைப் பார்த்தான். சங்கர் நீர் குடிப்பதற்காகச் சென்றான். அப்போது அந்த இடத்தில் அவன் நண்பன் முருகன் மிகுந்த தாகத்துடன் வந்தான். ஆனால் அங்கு ஒருவர் மட்டும் அருந்தும் அளவிற்கு நீர் இருந்தது. அப்போது சங்கர் அந்த நீரைத் தன் நண்பண் முருகனைக் குடிக்குமாறு விட்டுக்கொடுத்தான்.

அவனின் நன்றி மறவாத இந்தச் செயல் பாராட்டிற்கு உரியது. முருகன் அந்த நீரை அருந்தினான். அவன் செய்த தவற்றையும் உணர்ந்து சங்கரிடம் மன்னிப்புக் கேட்டான். மீண்டும் இருவரும் ஒன்று சேர்ந்தார்கள். சங்கர் தன் நண்பனுடன் சேர்ந்ததைப் பாறையில் எழுதிவைத்தான். இதிலிருந்து ஒரு செய்தி தெளிவாகிறது. ஒருவர் செய்த தவற்றை மறந்து மன்னிக்க வேண்டும் என்பதைக் காட்டவே சங்கர் அவர்களுக்கு ஏற்பட்ட சண்டையை மணலில் எழுதினான். ஒருவர் செய்த உதவியையும், நன்றியையும், நன்மை தரும், செயல்களையும் எப்போதும் மறக்கக் கூடாது என்பதை உணர்த்த நிலையாக உள்ள பாறையில் எழுதினான் சங்கர்.இதிலிருந்து அவர்களின் நட்பும் நன்றி மறவாத சங்கரின் செயலும் வெளிப்பட்டது.

**சீ.தமிழரசி,**
பி.சி.ஏ., முதலாமியாண்டு



## தெய்வமான ஆசிரியர்

ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் செடி,கொடி, மரங்கள் என்று கிராமமே வளமாக இருக்கும். மாலை நேரத்தில் தென்றல் காற்று வீச முல்லை மலர்கள் தன்இதழை விரிக்கக் காற்றில் நறுமணம் எங்கும் வீசும். குயில்கள் இசையுடன் பாட தவளைகள் தாளம் போட என்று அந்தக் கிராமமே இயற்கையின் பிறப்பிடமாக இருந்தது.

அந்த மாலைப்பொழுதில் காக்கைகளும், குயில்களும் தன் குழந்தைகளுடன் உணவு பரிமாறிக் கொள்வதைப் பார்த்துக் கண்ணீர் மல்கச் செல்வாள் விஜயகுமாரி. சிறுவயதிலேயே தன் தந்தையை இழந்தவள். தன் தாயின் கடின உழைப்பினால் கல்வி கற்று வந்தாள். விஜியின் தாய் கல்லுடைத்து அதில் வரும் வருமானத்தினைக் கொண்டுதான் படிக்க வைத்தாள். விஜியின் தாய் கல்லுடைத்ததால் உள்ளங்கை முழுவதும் புண்ணாக இருக்கும். அதனால் உணவைக்கூட உண்ண முடியாது.

விஜிக்குத் தன் தாயின்மீது அளவு கடந்த அன்பு, அம்மாவின் துன்பங்களை எண்ணி எப்போதும் வருந்துவாள். அதைப் போன்று விஜி என்றால் அவள் அம்மாவுக்கு உயிர். கல்லுடைக்கும் இடத்தில் ஏதேனும் கொடுத்தால் அதைத்தன் முந்தானையில் ஏந்தி வந்து தன் பிள்ளைக்குக் கொடுத்து அகம் மகிழ்வாள்.

சரியான சரிவிகித உணவு இன்றி அவள் அம்மாவின் உடல் மிகவும் மெலிந்தது. ஒருநாள் காய்ச்சலுடன் உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. வேலைக்குச் செல்லமுடியாத சூழல் ஏற்பட்டது. விஜயகுமாரி நன்றாகப் படிப்பாள். அவள்தான் வகுப்பில் முதலிடம் பெறுவாள். அவளின் விடுமுறைக்கான காரணத்தை மாணவர்களிடம் கேட்க மாணவர்கள் கல்உடைக்கச் சென்றதாகக் கூறினர். இதைக் கேட்டதும் ஆசிரியர் மனம் துன்பப்பட்டது. ஆசிரியர் விஜயகுமாரியின் வீட்டு விலாசத்தைக் கேட்டுச் சென்றார். அங்குச் சென்றதும் கதவற்ற வீடு. மழைபெற வீட்டில் மழைநீர் நிற்கும்படி கூரை அதன் உள்ளே ஒரு கீற்றில் விஜியின் தாய் உறங்கிக் கொண்டு இருந்தார்.

ஆசிரியர் விஜியின் வறுமையை நன்கு புரிந்து கொண்டார். கலக்கத்துடன் ஆசிரியர் திரும்பினார். அப்போது இரு கைகளைக் கூப்பியபடி ஆசிரியரை வணங்கி நின்றாள் விஜயகுமாரி. ஆசிரியர் விஜியிடம் பள்ளிக்கு வராததைக் கேட்க, விஜி கூறியதைக் கேட்டு ஆசிரியர் மனம் உடைந்தார்.

எனக்கு அப்பாவின் பாசம் என்றால் என்ன என்றே தெரியாது. அம்மாதான் என்னைப் படிக்க வைத்தார். இப்போது அம்மாவுக்கு உடல்நிலை சரியில்லை என்றதால்தான்தான் அம்மாவின் வேலையை நான் செய்து அம்மாவைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆசிரியர் இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என நினைத்தார். ஆசிரியர் விஜியின் படிப்புத்திறனை அவர் தாயிடம் கூறினார். அவள் சிறந்த புத்திசாலி, அவளைப் படிக்க வைத்தால் சிறந்த முறையில் வருவாள். அதனால் அவளை நானே படிக்க வைக்கிறேன் என ஆசிரியர் கூறினார். விஜியின் தாய் கண்ணீரால் நன்றியைத் தெரிவித்தார்.

விஜியின் படிப்பிற்கான அனைத்து செலவுகளையும் ஆசிரியர் பார்த்துக்கொண்டார். அம்மாவின் ஆசைப்படியும், ஆசிரியர் வேண்டுகோளுக்கிணங்கவும் விஜி சிறந்த முறையில் பள்ளிப் படிப்பு படித்து அதிக மதிப்பெண்களுடன் விஜியின் விருப்பத்தின்படி ஆசிரியர் படிப்பையும் முடித்தாள். அரசு வைத்த தேர்வில் முதலிடம் பெற்று அரசு வேலைக்குச் சென்றாள். விஜியின் ஆசிரியர் அவளின் வளர்ச்சியைக் கண்டு மனம் மகிழ்வு கொண்டார். தன் முதல் மாதச் சம்பளத்துடன் அம்மாவை அழைத்துக் கொண்டு ஆசிரியர் வீட்டிற்குச் சென்றாள். விஜி ஒன்று நினைக்க விதி வேறொரு விளையாட்டை விளையாடிவிட்டது. அவளது முதல் மாதச் சம்பளத்தில் துக்கமாலை வாங்கும்படி ஆயிற்று. ஆம்! அந்த இரக்கமனம் உடைய கோயில் சாய்ந்து விட்டது.

இதனை அறிந்த மரங்கள் அசையவில்லை. பறவைகள் பறக்கவில்லை, கடலலைகள் ஓய்ந்தது. விஜியின் இதயத்துடிப்பைப்போன்று, ஆசிரியர் நடந்த கால் சுவடுகளைக் கூட கலைக்க மனமின்றி தயங்கி நிற்கின்ற மழைமேகங்கள். விஜியின் ஆசிரியருக்கு மழை என்று பெயரோ! எந்த எதிர்பார்ப்பும் இன்றி என் தேவைகளைச் செய்து கொடுத்தும் என் கவலைகளைப் பகிர்ந்துகொண்டும் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ள மனம் இன்றி இறைவனடி சேர்ந்துவிட்டார்.

“என்ஆசிரியர் இறக்கவில்லை ஒவ்வொரு கோவிலிலும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார், இறைவனாக. இறக்க இருந்த என் அம்மாவை மீட்டுக் கொடுத்தவர் என் ஆசிரியர். உருவற்ற என்னை முழு உருவாக மாற்றி என் வாழ்க்கைப் பாதையைக் காட்டியவர். அவருக்கு நன்றி செலுத்தும் விதமாக ஒரு பள்ளி நிறுவி அவளால் முடிந்தவரை மாணவர்களுக்கு இன்றும் உதவி செய்து கொண்டுதான் இருக்கின்றாள் விஜி.

**எஸ். லூர்துமேரி,**
பி.ஏ., மூன்றாமியாண்டு.

## செய்ந்நன்றி

ஒரு ராஜா மந்திரியைக் கூப்பிட்டு நீ அரண்மனையைப் பார்த்துக்கொள். நான் போய் நாட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன் என்று சொல்லிவிட்டு குதிரையில் ஏறிச் சென்றார். அவர் போன பாதையில் யானை பிடிக்கிறவர் யானையைப் பிடிக்க பெரிய பாதாளக் குழியை வெட்டி அதன் மேல் இலை,தழைகளைப் போட்டுப் பரப்பியிருந்தார். அதைக் கவனிக்காமல் போன மன்னர் குழிக்குள் தொப்பென்று விழுந்துவிட்டார். அய்யோ என்னை யாராவது தூக்கிவிடுங்க. தூக்கி விடுபவர்களுக்கு என் சொத்தில் பாதி தருகிறேன் என்று கூச்சலிட்டார்.

அப்போது அப்பக்கமாக ஒரு விறகு வெட்டி மரம் வெட்ட வந்தார். மன்னரின் கூச்சல் அவரது காதில் விழுந்தது. என்னடா இது? தூக்கி உதவுகிறவர்களுக்குச் சொத்தில் பாதி தருகிறேன் என்று சொல்வது யாரு? போய்தான் பார்ப்போம் என்று குரல் வந்த திசையை நோக்கிச் சென்றார். பாதாளக்குழியிடம் வந்ததும் தள்ளியிருந்தே பார்த்தார். மறுபடியும் அந்தக் குரல் கேட்டு குழிக்குள் எட்டிப்பார்த்தார். உள்ளே ஒரு மனிதன், குதிரை, ஏதேதோ இருந்தது.

விறகு வெட்டி கையில் கயிறு வைத்திருந்தார். அந்தக் கயிற்றின் ஒருமுனையை ஒரு மரத்தோடு இறுக்கமாகக்

கட்டிவிட்டு மறுமுனையைப் பிடித்துக்கொண்டு குழிக்குள் இறங்கி, மன்னரையும், குதிரையையும் காப்பாற்றி மேலே கொண்டுவந்து விட்டுவிட்டார். மேலும் அக்குழியில் ஒரு பாம்பும், ஒரு குரங்கும் தவித்துக் கொண்டிருந்தது. விறகு வெட்டி குரங்கையும், பாம்பையும் காப்பாற்றினார்.

தன்னையும், குதிரையையும் காப்பாற்றிய விறகு வெட்டிக்கு நன்றி கூடச் சொல்லாமல் மன்னர் குதிரையில் ஏறிச் சென்று விட்டார். என்னடா இது! குழியில் இருந்து தூக்கி விடுபவர்களுக்குத் தன்சொத்தில் பாதி தருவதாகக் கூறிய மன்னர் நன்றிகூடச் சொல்லாமல் சென்றுவிட்டாரே! நல்ல மனிதன்! என்று புலம்பிக்கொண்டே விறகு வெட்டி வீட்டிற்குச் சென்று தன் மனைவியிடம் முணுமுணுத்துக் கொண்டே உறங்கிவிட்டார்.

மறுநாளும் விறகுவெட்டி விறகு வெட்டச்சென்றார். அங்கு விறகு எல்லாம் வெட்டப்பட்டுக் கீழே கிடந்தது. மேலே அண்ணாந்து பார்த்தபோது அவர் காப்பாற்றிய குரங்கு விறகுகளை எல்லாம் வெட்டிப்போட்டிருந்தது. அந்நேரம் பார்த்து அவர் காப்பாற்றிய பாம்பும் அங்கு வந்து அவருக்காக நாகரத்தினக்கல்லைக் கொடுத்தது. விறகையும், நாகரத்தினக்கல்லையும் எடுத்துக் கொண்டு வீட்டிற்குச் சென்று தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினார்.

பாம்பு கொடுத்த நாகரத்தினக்கல்லைக் கொண்டுபோய் சந்தையில் விற்று அப்பணத்தில் வீடுகட்டி சுகமாய் வாழ்ந்து வந்தார். இதைப்பார்த்த பக்கத்து வீட்டுக்காரனுக்குப் பொறமை எண்ணம் உருவானது. ஒரு சாதாரண விறகு வெட்டி நமக்கு மேல் பணக்காரன் ஆகிவிட்டானே! இவனை சும்மா விடக்கூடாது என்று எண்ணி மன்னரிடம் புகார் அளித்தார்.

அதனைக் கேட்ட மன்னர் தன் காவலாளிகளை அனுப்பி விறகு வெட்டியை அழைத்து வரச்சொன்னார். அங்கு வந்த விறகுவெட்டியைப் பார்த்த மன்னர் நீ எப்படி ஒரே நாளில் பணக்காரன் ஆனாய் எனக் கேட்டார்? விறகு வெட்டி பயப்படாமல் நிதானமாக நடந்தவற்றையும், தன்பக்கத்து நியாயத்தையும் மன்னரிடம் கூறினார்.

அரசே தங்களைக் குழியிலிருந்து தூக்கி விடுபவர்களுக்குத் தன் சொத்தில் பாதி தருவதாகக் கூறிவிட்டு நன்றிகூடச் சொல்லாமல் சென்றுவிட்டீர்கள். ஆனால் அந்தக்குழிக்குள் விழுந்த குரங்கு எனக்காக விறகுகளை வெட்டிப் போட்டது, பாம்பு நாகரத்தினக்கல்லை என்னிடம் கொடுத்து உதவியது. ஆனால் தாங்கள் மட்டும் சொன்ன வார்த்தையை மறந்து விட்டீர்கள். அதுமட்டுமா பக்கத்து வீட்டுக்காரன் பேச்சை நம்பி என்னை இங்கு அழைத்து வந்துவிட்டீர்களே மன்னா! நீங்கள் பெரிய மன்னராய் இருக்கலாம் ஆனால், உங்களை விட விலங்குகளுக்கு நன்றியுணர்வு அதிகம் என்று விறகுவெட்டி சொல்ல மன்னருக்கு மிகவும் வெட்கமாகிவிட்டது.

அந்த விறகு வெட்டிக்குத் தண்டனை ஏதும் அளிக்காமல், பொன்னும், பொருளும் கொடுத்து நன்றி கூறி அனுப்பி வைத்தார். விறகுவெட்டியும் மிக மகிழ்ச்சியாக வீடுசென்று தன் மனைவியிடம் நடந்ததைக் கூறினார்.

**யு.தேவிபாலா,**
பி.ஏ.,இரண்டாமியாண்டு

# கட்டுரைகள்

## உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?

**முன்னுரை :**

தன்னம்பிக்கை, விடா முயற்சி, உழைக்கும் ஆர்வம் ஆகிய மூன்றும் மனித வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையானவை. முன்னோர்கள் சேர்த்து வைத்திருக்கும் பொருள் இருப்பதால் சிலர் செருக்கோடு வாழ்கின்றனர். அந்தச் செல்வம் கரைந்ததும் தங்கள் நிலையை எண்ணிக் கண்ணீர் வடிக்கின்றனர். பின்னர் உழைத்துப் பொருள் சேர்க்கும்போது உழைப்பின் அருமையை உணர்கின்றனர். அத்தகைய உழைப்பின் அருமை, பெருமைகளை இக்கட்டுரை முன் வைக்கிறது.

**உழைப்பின் பலன் :**

அறிவினால் உழைப்பவர்கள் ஆளுகின்றனர். உடலினால் உழைப்பவர்கள் ஆளப்படுகின்றனர். ஆகவே உழைப்பு மிக அவசியம். உழைத்துக் கொண்டிருக்க வேண்டும். தம் இலட்சியத்தை அடையும் வரை உழைத்துக் கொண்டே இருக்க வேண்டும்.

> “ஆக்கம் வேண்டுமெனில் - நல்ல
> நோக்கம் வேண்டும் எனில்
> ஊக்கம் வேண்டுமப்பா - ஓயாது
> உழைக்க வேண்டுமப்பா”

என்னும் பாடல் வரிகள் உழைப்பை உணர்த்துகின்றன.

ஊக்கத்தோடு உழைக்காமல் வெற்றியைப் பெற இயலாது. நம் நாட்டில் உழைப்பவன் தாழ்ந்தவன் என்றும், உழைக்காமல் இருப்பவன் உயர்ந்தவன் என்றும் தவறான கருத்து நிலவி வருகிறது. அதையே பெரும்பாலும் பலர் விரும்புகின்றனர். ஊக்கத்துடன் உழைப்பதே, உயர்ந்த செல்வமாகும். உழைத்துச் சேர்க்கும் பொருளுக்கு எப்போதும் சிறப்பு மிகுதியாக இருக்கும்.

**உழைப்பினால் உயர்ந்தவர்கள் :**

நம் நாட்டில் பலர் உழைத்து உயர்ந்துள்ளனர். இன்றும் உழைத்து உயர்ந்து வருகின்றனர். அவர்களைப் பின்பற்றி நாமும் வாழ்வில் முன்னேற வேண்டும். அவ்வாறு உயர்ந்த சிலரைப் பற்றிப் பார்க்கலாம்.

**ஆபிரகாம் லிங்கன் :**

இவர் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு இருமுறை வெற்றி பெற்றார். தந்தை பெயர் லிங்கன். தாய் இளம் வயதிலேயே இறந்துவிட்டார். ஒரு தங்கை, சாரா என்பது அவள் பெயர். ஆபிரகாம் ஏழு கிலோ மீட்டர் நடந்து சென்று தொடக்கக் கல்வியைக் கற்றார். உயர்நிலைக் கல்வி பயிலும்போது ஒருநாள் ஜார்ஜ் வாஷிங்டன் என்னும் அமெரிக்க ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தை ஆர்வமுடன் படித்து முடித்தார். நாமும் அவரைப்போல் ஜனாதிபதியாக வேண்டும் என நினைத்தார். தன் தந்தையுடன் விறகு வெட்டும் வேலைக்குச் சென்றனர்.

மிக ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த இவர் பல போராட்டங்களுக்குப் பின்னர் 16வது அமெரிக்க ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். ஏழையின் குடிசையில் பிறந்த இவர் வெள்ளை மாளிகைக்குக் குடியேறியது இவரது உழைப்பின் பலனே.

**அம்பேத்கர் :**

இவர் மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள, சிறு கிராமத்தில் பிறந்தார். தந்தை இராம்ஜி சக்பால், தாய் பீமாபாய். அம்பேத்கர் மகர் என்னும் தாழ்ந்த குடியில் பிறந்தவர். இந்த வகுப்பினருக்குப் பொதுஇடத்தில் நீர்எடுக்கவும், கோயிலுக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டது. தாழ்த்தப்பட்டவன் என்பதால் பள்ளியில் கோணிப்பை மீது இவரை அமரச் செய்தனர். இத்தகைய செயல் இவர் மனதைப் பெரிதும் பாதித்தது.

இந்நிலையை மாற்ற எண்ணிப் பல்வேறு எதிர்ப்புகளை மீறி, பள்ளியில் படித்தார். இவர் அனைத்து பாடத்திலும் முதல் மாணவனாகத் திகழ்ந்தார். உயர்நிலைப்பள்ளி ஒன்று இவருக்குப் படிப்பதற்கு இடமளிக்க மறுத்துவிட்டது. பின்னர் பாடங்களை நன்கு படித்து முதல் மாணவனாகத் திகழ்ந்ததால் இவருக்கு இடம் அளிக்கப்பட்டது. தெருவிளக்கு வெளிச்சத்தில் இரவு, பகலென பாராமல் படித்தார். சட்டம் பயின்றார். பல்வேறு பட்டங்களைப் பெற்றார். தம்மால் முடிந்த அளவிற்குப் படித்துப் பல பட்டங்களைப் பெற்றார்.

"படிப்பு தேவை - அதோடு<br>
உழைப்பும் தேவை<br>
முன்னேற படிப்பு தேவை<br>
கடின உழைப்பும் தேவை"

என்ற பாடலுக்கு ஏற்றவாறு நடந்தார். இறுதியில் இந்திய அரசியல் சீர்திருத்தக் குழுவில் இவரையும் ஒருவராக ஜவஹர்லால் நேரு நியமித்தார். இந்நிகழ்வு கடின உழைப்பால் வந்த பலனைத் தெரிவிப்பதோடு, பிறருக்கு அறிவுரையும் வழங்குகின்றது.

**ஷேக்ஸ்பியர் :**

இவர் தந்தை குதிரைப் பந்தயம் நடக்குமிடத்தில் மேற்பார்வையாளராக இருந்தார். ஷேக்ஸ்பியர் சிறுவயதிலேயே திறந்தவெளி நாடகங்களைப் பார்த்து நாமும், அதேபோல் நாடகங்களை எழுதவேண்டும் என்று எண்ணினார். எண்ணினால் போதுமா! எண்ணத்துடன் தம் உழைப்பையும் சேர்த்து பல நாடகங்களை எழுதினார். அமரகாவியம் படைத்தார், ஆங்கில மொழியில் மிகச்சிறந்த நாடகங்களை எழுதினார். இவர் இன்றளவும் பலரால் புகழப்படுகிறார். இவரது இந்த வெற்றிக்குக் காரணம் கடின உழைப்புதான்.

**தாமஸ் ஆல்வா எடிசன் :**

இவர் தந்தை மீனவ குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பல பொருட்களைக் கண்டறிந்த அறிஞராகச் செயல்பட்டார். இன்று நாம் பயன்படுத்தும் பல பொருட்களும் இவர் கண்டுபிடிப்புகளை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

இவ்வாறு பலரும் தங்கள் உழைப்பை எண்ணி வாழ்வில் வெற்றி பெற்றுள்ளனர்.

**உழைப்பே உயர்ந்த எண்ணங்களைத் தரும் :**

உழைப்பினால் நமக்குள் உயர்ந்த எண்ணங்கள் வளரும். உயர்ந்த எண்ணங்களைக் கொண்டு வாழ்வைச் செழிப்பாக்க முடியும். ஒருவன் உழைத்து வாழ முற்படும்போது. ஆங்காங்கே சிற்சில பிரச்சனைகள் தலைதூக்குவது உண்டு. அதனைக் கண்டு மனம் தளராமல் அந்த பிரச்சனையையே வெற்றிக்கு வித்தாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

"நல்லவே எண்ணல் வேண்டும்
எண்ணிய முடிதல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்அறிவு வேண்டும்"

எனப் பாரதியார் கூறும் பாடலடிகள் உழைப்பிற்கான அடித்தளத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

**உயர்ந்தோர் பலன் :**

உழைப்பின்மீது நம்பிக்கை கொண்டவர்கள் உயர்ந்து விட்டார்கள். தங்கள் திறமை மீது நம்பிக்கை கொண்டவர்கள் வான்புகழ் எய்தி உள்ளனர். மனிதன் தம்மிடத்தில் உள்ள விரல்களையே மூலதனமாகக் கொள்ள வேண்டும். உழைப்பு மனிதனை நற்பண்புடன் வழிநடத்தும் ஆசானாகச் செயல்படுகிறது. தம் உண்மையான உழைப்பால் வரும் வெற்றி மனிதனுக்கு நற்சிந்தனையை மட்டுமின்றி தெளிவையும் கொடுக்கும்.

**முடிவுரை :**

உழைப்பவரே உயர்ந்தவர் என்ற உன்னதமான நிலையை இவ்வுலகிற்கு உணர்த்த மே மாத முதல்நாள் உழைப்பாளர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. உழைப்பால் முடியாதது ஏதுமில்லை. முயற்சியும், உழைப்பும் ஒருவனுக்கு இருக்குமானால் அவன் உயர்ந்த நிலையை அடைவான். அத்தகைய உழைப்பின் மூலம் வெற்றி என்னும் வாகையைச் சூடியவர்கள் பலர். அவர்களை மதித்து அவர்களின் வழியை நாமும் பின்பற்றுவோம். வெற்றி பெற உழைக்கவேண்டும். நாம் உழைக்க முன்வந்தாலே அதுவே வெற்றிக்கு வழியாகும். உழைப்பால் வெற்றி என்பது உறுதி! ஆகவே,

**உழைப்பை நேசிப்போம்!**

உழைப்பால் உயர்வோம்! எனும் நெறியில் வாழ்வை வளமாக்கிக் கொண்டு அடுத்த தலைமுறையையும் வாழ வைப்போம்.

**மை. பாரதி,**
பி.லிட்.,மூன்றாமியாண்டு.



## இந்தியா வளர்ச்சிப் பாதையை நோக்கி

**முன்னுரை:**

கனவுகள் இல்லாமல் இருந்த என்னை அப்துல்கலாமின் 'கனவு காணுங்கள்' என்ற உரத்த சிந்தனை தட்டி எழுப்பியது. விழித்துக் கொண்ட என்னுள் எழுந்த சிந்தனை நம் நாடு ஏன் வளர்ச்சியடையாமலேயே உள்ளது. எல்லா வளமும் நலனும் பெற்று நம் மக்கள் வாழ நாம் என்ன செய்ய வேண்டும். இது கனவாக மட்டும் இல்லாமல் நனவாக என்ன செய்ய வேண்டும் என்பதை இக்கட்டுரை விளக்குகிறது.

**மக்களின் இன்றைய நிலை:**

இந்திய நாட்டில் ஏராளமான மக்கள் ஒரு வேலை சாப்பாட்டிற்குக் கூட வழியில்லாமல் இருக்கின்ற நிலை காலாகலமாக நீடித்துக் கொண்டே இருக்கிறது. நாம் வாழும் சூழலில் நமக்காக மட்டும் இல்லாமல் பிறருக்காகவும் வாழ வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனுக்கும் வரவேண்டும். அந்த எண்ணம் என்று வருகிறதோ அப்போதுதான் இந்திய நாடு வளர்ச்சிப் பாதையை நோக்கிக் கால் வைத்திருக்கிறது என்று அர்த்தமாகும்.

**வளர்ச்சி நிலை:**

இந்தியா வளர்ச்சி அடைந்தால் போதும் என்ற எண்ணம் எல்லாரிடமும் வருவது நல்லதுதான். ஆனால் அது எத்தனை பேருக்கு வந்துள்ளது? நினைத்துப் பாருங்கள். கல்வியில் நம் நாடு

எத்தனையாவது இடத்தை வகிக்கிறது. அதற்கு எவ்வளவு சட்டங்கள் போட்டாலும் அந்த நிலையை விட்டு மாற வில்லையென்றால் அதற்குக் காரணம் அரசாங்கம்தான். சட்டம் போடுவது முக்கியம் அல்ல. அதைச் சரியாக நடத்தத் தகுதியானவரைத் தேர்ந்து எடுக்க வேண்டும்.

இதில் சாதாரண மக்கள் தான் பாதிக்கப்படுகிறார்கள். யாரையும் எதிர்க்கும் துணிவின்றி சுமையையே சுமந்து கொண்டிருக்கிறார்கள். நியாயம் கேட்க முடியாத நிலையில் இருந்து கொண்டு இருக்கிறார்கள். பேருந்தில் அதிகக் காசு கொடுக்க தினசரி கூலிவேலை செய்து குடும்பத்தை நடத்துபவர்களால் முடியுமா? யோசித்துப் பாருங்கள். வளர்ச்சி என்பது ஒருவர் உருவாக்குதல் இல்லை. எல்லாரும் ஒன்று சேர்ந்து உருவாக்குவதே ஆகும்.

வளர்ச்சி அடையும் வழி:

பிற்காலத்தில் வரும் இளைஞர்களுக்கு ஒன்றை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். நமக்காக நாம் இல்லாமல் நம்மைச் சுற்றிலும் என்ன நடக்கிறது என்பதை ஒரு கணம் நினைத்துப் பாருங்கள். கல்வி ஒன்றால் மட்டுமே நாம் விழித்தெழ முடியும் நாட்டினை உயர்த்த முடியும். உங்களால் முடிந்த உதவிகளைச் செய்யுங்கள். நம் நாடு ஒரு வளர்ச்சி அடைந்த நாடாக அமையும்.

பாரதி கண்ட இந்தியா:

நம் நாட்டில் அரசியல் எவ்வாறு நடைபெறவேண்டும் என சிந்தித்து நாட்டை மையமாக வைத்து பாஞ்சாலி சபதத்தை அன்றே கூறினார். தனி ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்ற அவரது துணிச்சல் நமக்கும் வரவேண்டும். நம் காலத்தில் எல்லா வளமும் நலமும் கொண்டு வாழ ஒற்றுமையே அடிப்படை அது நீங்கிடில் அனைவருக்கும் தாழ்வு எனக் கண்டு கூறினார். தமிழ் இனி மெல்லச் சாகும் என்றாரே ஏன் என்று சிந்தித்துப் பாருங்கள்.

பெண்களின் நிலை:

இன்றைய பெண்கள் எல்லாத் துறைகளிலும் பணிபுரிய முடிகிறது என்றால் அதற்கு எத்தனையோ அறிவுடையவர்கள்தான் காரணமாக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சமூகத்தில் பொறாமை நிறைந்த உள்ளங்கள் குறைந்து கொண்டிருப்பதால் யாரும் யாரையும் மதித்து வாழ முடியாமல் அதை மறுக்கிறார்கள். எத்தனையோ இடையூறுகளையும் கடந்து பெண்கள் பள்ளிகளுக்கும், கல்லூரிகளுக்கும் செல்கிறார்கள். ஆனால் அதை இடையூறு செய்யும் வகையில் ஆடவர்கள் அவர்களைக் காதல் என்னும் பெயரால் கலங்கச் செய்கிறார்கள். ஒருவரின்மீது ஒருவருக்கு ஆசை என்பது வேறு. ஒருவருக்குப் பிடிக்காத ஒன்றைக் கூறி வற்புறுத்துவது என்பது வேறு. இதைத்தான் அகப்பொருள் இலக்கியம் ஒருதலைக் காமம் என்று கூறுகிறது. தவறைத் திருத்திக்கொண்டு வாழ்ந்தால் நம் சமூகம் தழைக்கும் மானுடம் வாழும்.



முடிவுரை:

இன்றைய சமுதாய முன்னேற்றத்தில் ஆண், பெண் இருவரும் கலந்து வளர்ச்சி என்ற பாதையில் செல்வோம். இந்தியாவை வல்லரசு நாடாக்க முன்னோக்கிச் செலுத்துவோம்.

வாழ்க நம் பாரதம் !!!

**வி.திவ்யா**
பி.லிட்.,இரண்டாமியாண்டு

## படபடக்கும் பட்டாம் பூச்சி

முன்னுரை:

பட்டாம்பூச்சிகள் அனைவரையும் ஈர்ப்பவை. காற்றில் சிறகடித்து வாயுமண்டலத்தில் பறந்து செல்லும்போது நம் இதயத்தின் ஒரு பகுதியைப் பறித்துக்கொண்டு செல்வது பட்டாம்பூச்சி. வண்ணவண்ணச் சிறகுகளோடு அவை தென்றலிடம் என்ன கிசுகிசுக்கின்றன என்று யோசிக்காமல் யாராலும் இருக்க முடியாது. அவற்றைப் பற்றி சில சுவையான சிந்தனைகளை இக்கட்டுரை முன்வைக்கிறது.

மனிதர்களும் பட்டாம்பூச்சிகளும்:

சிறுவர்களாக இருக்கும்போது பட்டாம்பூச்சிகளைப் பிடிப்பதில் தோற்றுப் போகாதவர்கள் யாரும் இருக்க முடியாது.

அப்படிப் பிடிக்க நேர்ந்தால் அவற்றின் சிறகுகளில் இருக்கும் வண்ணச் செதில்கள் கைகளில் ஒட்டிக்கொள்வதைக் காண முடியும். உடனே அவற்றிற்கு ஆபத்து என அறிந்து விடுவித்து விடுவோம்.

"கோரியலேனஸ்" என்ற ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் அதன் நாயகன் பட்டாம்பூச்சிகளைப் பிடித்துச்சிறைப்படுத்தி மீண்டும் பறக்கவிட்டு, மறுபடி கையகப்படுத்தி கொடுமைப்படுத்தும் குணமுடையவனாக சித்தரிக்கப்பட்டிருப்பான்.

பூச்சியியல் படிப்பவர்களுக்கு மட்டுமே தெரியும் பட்டாம் பூச்சிகளுக்கும், அந்துப் பூச்சிகளுக்கும் உள்ள வேறுபாடு.

பட்டாம்பூச்சிகள் இறகுகளை மொட்டுகளைப் போலக் குவித்து வைக்கும். அந்துப் பூச்சிகள் புத்தகங்களைப்போல விரித்து வைக்கும். பகலில் நடமாடுபவை வண்ணத்துப்பூச்சி. இரவில் திரிபவை அந்துப்பூச்சி.

**வண்ணத்துப்பூச்சியின் சிறப்பு:**

இந்தியா 1200க்கும் மேற்பட்ட ரகங்களுக்குத் தாயகம். மலர்களிடையே மகரந்தச் சேர்க்கை நடத்தும் தபால்காரராக அவை இருந்து பழங்களும், காய்கறிகளும் உற்பத்தியாக ஒத்தாசை புரிகின்றன.

புழுக்களாகஇருந்து செடிகளுக்குச் சேதம் விளைவிக்கும் அவை பட்டாம்பூச்சிகளானதும் பயிர் உற்பத்திக்குப் பரிந்துரை செய்கின்றன.

முதுமை அழகு என்பதற்குப் பட்டாம்பூச்சி சாட்சி. வண்டினத்திற்குப் பிறகு அதிக எண்ணிக்கையில் இருப்பது பட்டாம்பூச்சிகளே. அவற்றில் விதவிதமான இறகுகள் இருக்கின்றன.

புழுவாக அசிங்கமாக இருக்கும் அந்த உயிர் ஒரு நாள் கூட்டை நெட்டித் தள்ளிக் கொண்டு அழகிய பட்டாம்பூச்சியாய் சிறகடிக்கிறது. அந்த நொடியில் இருத்தல் முழுவதும் சிலிர்ப்பு ஏற்படுகிறது.



**சேலைக்கும் பட்டாம்பூச்சிக்கும் உள்ள தொடர்பு:**

துகிலுரியப்பட்டுக் கொண்டிருக்கும் திரௌபதியின் சேலையை இழுக்க இழுக்க அது வளர்ந்த கதை நமக்குத் தெரியும். அப்படி உருவிய சேலையிலிருந்து உயிர்பெற்று எழுந்தவைதாம் வண்ணத்துப்பூச்சிகள் என்கிற வட்டார வழக்குக் கதை உண்டு.

**முடிவுரை:**

பூச்சியியல் படிப்பவர்களால் மட்டுமே வண்ணத்துப் பூச்சிகளை வாசிக்க முடியும். வண்ணத்துப்பூச்சி அழிகின்றன என எண்ணினால் அது தவறு. தாய்ப்பூச்சி இடும் நூற்றுக்கணக்கான முட்டைகளில் இரண்டு வெற்றிகரமான வளர்ச்சியை அடைந்தாலே போதும் அதன் இனம் நீடிக்கும்.

இயற்கை எவ்வளவு அழகு என்பதை பட்டாம்பூச்சிகளைப் பார்த்து மட்டுமே நாம் கற்றுக் கொள்ளலாம். அழகுக்கும் அருவருப்புக்கும் நூலிழை மட்டுமே வேறுபாடு என்பதை கூட்டுப்புழு நமக்குப் புரியவைக்கும்.

**கோ. பத்மாவதி**
பி.லிட்., முதலாமியாண்டு

## பெண்

**முன்னுரை:**

மாந்தர் போற்றும் மாந்தர்க்கு மாலைகள்தரவேண்டும் என்று பாடினர் கவிஞர் பெருமக்கள். மங்கையராகப் பிறப்பதற்கு நல் மாதவம் செய்திடல் வேண்டும் என்றார் கவிமணி. பெண்ணைத் தாயாகக் கருதி வந்த பாரத நாட்டில் பெண்கள் அடிமைப் படுத்தப்பட்டும், கொடுமைப்படுத்தப்பட்டும் வருகிறார்கள். பெண்களைப் பெண்களே அழிக்கவும் முற்படுகிறார்கள். இத்தகைய நிலை மாறி மகளிர் முன்னேறுவதற்குரிய வழி வகைகளை இக்கட்டுரை உணர்த்துகிறது.

**பெண்ணின் நிலைமை:**

சங்க காலத்தில் பெண்ணிற்கென பெருமை இருந்தது. அதனால்தான் தாய்நாட்டையும், நதிகளையும் பெண்ணின் பெயர்

கொண்டு அழைத்தார்கள். சங்க காலத்தில் பல பெண்புலவர்கள் இருந்தனர். அதில் 30க்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் புலமைச் செல்வியராய் விளங்கினர் என்பதிலிருந்தும், ஜான்சிராணி, ராணிமங்கம்மாள் போன்ற மகளிரின் வீரவாழ்க்கையிலிருந்தும் பெண்கள் எல்லாத்துறையிலும் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

ஒரு குடும்பத்தில் ஆண் வகிக்கும் பொறுப்பை இன்று பெண்களும் வகிக்கிறார்கள். பல குடும்பங்கள் பெண்ணை நம்பியே நடக்கின்றன. ஆனால் இன்றளவும் வரதட்சணை என்ற பெயரால் பெண்ணையும் கொடுத்துப் பொன்னையும் கொடுக்கிறார்கள். அப்பெண்களில் பலர் புகுந்த வீட்டுப் பெண்களாலேயே கொடுமையும் படுத்தப்படுகிறார்கள்.

**சமுதாயத்தில் பெண்களின் நிலை:**

சமுதாயத்தில் பெண்களுக்கு இரண்டாம் இடமே தரப்படுகிறது.இந்திய நாட்டில் உள்ள கணவர்கள் பெரும்பாலும் தங்கள் மனைவியின் முன்னேற்றத்தைச் சவாலாக நினைத்து அவர்களைத் தன்னுடைய போட்டியாளராகப் பார்க்கிறார்கள். அதுமட்டும் இன்றி குடும்பத்தில் உள்ள அனைத்து நபர்களையும் அரவணைத்துச் செல்லும் கடமை அவளுக்கு மட்டுமே உள்ளதாகச் சமூகம் பார்க்கின்றது. சுதந்திரமாகத் தன்னுடைய கருத்துக்களைச் சொல்லவும், விருப்பப்படி வாழவும் பெண்களுக்கு உரிமையில்லை.

> தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்" (குறள்.56)

சமுதாயம் என்னும் வண்டியில் இருசக்கரங்கள் ஆணும் பெண்ணும் என்ற உண்மையைப் புரிந்து மகளிர் முன்னேற்றத்தில் யாவரும் பங்கு கொள்ளவேண்டும்.

> முட்களுக்கிடையே
> மலரும் ரோஜா
> சொல்லிக் கொடுக்கிறது
> துன்பத்திலும்
> மலர்ச்சியுடன் வாழும்
> வாழ்க்கைப் பாடத்தை



பெண்ணின் உயர்வு நாட்டின் உயர்வு என்பதை உணர்ந்து ஒவ்வொரு தனிமனிதனும் செயலாற்ற வேண்டும். தாய், தங்கை, தமக்கை, மனைவி, மகள், மருமகள் எனப் பல பரிமாணங்களைக் கொண்ட பெண் குடும்பத்தில் உயர்வானவள் என மதிக்கப்படும் பொழுதுதான் நாடும் உயரும் நலமும் பெற இயலும்.

**அ. யுவராணி**
பி.லிட்., முதலாமியாண்டு

## பெருந்தலைவர் காமராஜர்

**முன்னுரை :**

தென்னாட்டுகாந்தி என்று அன்போடு மக்களால் அழைக்கப் படுபவர் கர்மவீரர் காமராசர். தன்னலம் கருதாது பொதுநலம் கருதிய தலைவர்களுள் ஒருவர். இவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த தன்னிகரில்லாத் தலைவராக உயர்ந்த உத்தமர்.

**பிறப்பு :**

> "தோன்றின் புகழோடு தோன்றுக அஃதில்லார்
> தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கு ஏற்றவாறு கல்விக்கண் திறந்த காமராசர் சிவகாமி அம்மையாரின் கருவறையிலிருந்து 1903ம் ஆண்டு ஜீலை 15ஆம் நாள் கண்திறந்தார். அந்நாள் எதிர்காலத்தின் இனிய நாள்.

**இளமைப்பருவம் :**

இளம் வயதிலேயே தாய்நாட்டின் மீது பற்று கொண்ட காரணத்தினால் இந்திய விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். அதனால் பலமுறை சிறைச்சாலைக்கும் சென்ற வீரர் இவர். இந்திய நாட்டின்மீது அளவற்ற அன்பு கொண்டு இருந்த காமராஜர் நாட்டு மக்களை வெகுவாக நேசித்தார். அவர் பள்ளிக்கூடம் சென்று படித்ததில்லை. இருப்பினும் தமிழகத்தில் ஏழைகள் உட்பட அனைவரும் கல்வி கற்றவர்களாக இருக்க வேண்டும் என்று ஆசை கொண்டவர்.

தமிழக முதல்வரானார் :

மூதறிஞர் ராஜாஜி தமிழக முதல்வர் பதவியிலிருந்து விலகிய காரணத்தினால் 1954ஆம் ஆண்டு காமராஜர் தமிழக முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். தன் நாட்டு மக்களின் நலனுக்காகப் பாடுபட்ட இவர் தன் வாழ்நாளில் திருமணமே செய்து கொள்ளாமல் பிறர்க்கெனவே வாழ்ந்தார்.

“நாடென்ன செய்தது நமக்கு என்று
கேள்விகள் கேட்பது எதற்கு
நீ என்ன செய்தாய் அதற்கு என்று
நினைத்தால் நன்மைகள் உனக்கு”

மாணவர்களாகிய நாம் நாட்டைப்பற்றி நினைப்பதும் இல்லை. நாட்டுக்காக ஒன்றும் செய்வதும் இல்லை. ஆனால் என் காமராசர் அன்று நாட்டைப்பற்றி நினைக்காமல் இருந்திருந்தால் மதியஉணவு எனும் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்க முடியுமா? அன்று என் காமராசர் சிந்தித்தார். பள்ளிக்கூடத்தில் உணவு கிடைத்தால் ஏழை மாணவர்கள் பள்ளிக் கல்வி கற்க வருவார்கள் என்ற எண்ணம் அவருக்குள் பிறந்தது. உடனே தமிழகத்தில் இலவசமாக அனைத்து பள்ளிக்கூடங்களிலும் மதிய உணவு வழங்க வேண்டும் என்ற திட்டத்தை வகுத்தார். நாட்டு மக்களின் நலம் ஒன்றையே பெரிதும் நினைத்துப் பாடுபட்டார். அதனால்தான் காமராசரை “படிக்காதமேதை, கர்மவீரர், கருப்பு காந்தம், ஏழைகளின் நண்பன்” என்று மக்கள் சிறப்புப் பெயர்கள் கூறி அழைத்தனர்.

தமிழகத்தின் பொற்காலம் :

மக்களின் நலன் ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு ஆட்சி நடத்தினார் காமராசர். அதனால் அவர் ஆட்சிக் காலத்தை தமிழகத்தின் பொற்காலம் என்று பலர் கூறுவதுண்டு. ஒரு நாட்டில் கிராமங்கள் வளர்ச்சி அடைந்தால்தான் அந்நாடு வளம்பெறும் என்ற காந்தியடிகளின் கூற்றைத் தானும் மேற்கொண்டவர் காமராசர். கிராம மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் கிராமங்கள்தோறும் பள்ளிகள் திறக்கச் செய்தார். அதுபோல் ஏழை, செல்வந்தர் பாகுபாடு நீங்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் பள்ளிக் கூடங்களில் சீருடைத் திட்டத்தினையும் ஏற்படுத்தினார்.



அனைவரின் அன்பாளர் :

காமராசர் காங்கிரஸ் கட்சியைத் தழுவி இருந்தாலும் முதல்வர் பதவியிலிருந்து விலகிய பின்பும் மற்ற எல்லா அரசியல் கட்சித் தலைவர்களின் மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவராகவே திகழ்ந்தார். இதிலிருந்து கட்சிவேறுபாடு இன்றி எல்லோருடைய மனதிலும் இடம்பெற்றவர் காமராசர் என்பது உறுதியாகிறது.

“மாபெரும் சபையில் நீ நடந்தால்
உனக்கு மாலைகள் விழவேண்டும்
ஒரு மாசு குறையாத மன்னவன் இவன் என்று
போற்றிப் புகழவேண்டும்”

இவ்வார்த்தைக்கு உதாரணமாய், காட்சிக்குச் சாதாரணமாய் வாழ்ந்தவர் படிக்காத மேதை கர்மவீரர் காமராசர்.

முடிவுரை :

மேகத்தால் தாகம் தீரும் மலர்கள் நேசம் வாசமாகும். பாருக்குள் பாசம் வைத்தால் மறைவுக்குப் பின்னும் வரலாறு உன்னை வணங்க வைக்கும். நிலமகளின் வறுமை நீங்க நீர்தேக்கி விவசாயிகளின் வாழ்வில் வெளிச்சம் மூட்டியவர் காமராசர். அணைக்கட்டுகள் பல திறந்து சோர்விலாத் தமிழகம் காண விழைந்திட்டவர் காமராசர். இவரைக் கருணையில்லாத கால தேவன் மரண அழைப்பு அனுப்பினாலும் தரணியுள்ளவரை, தமிழுள்ளவரை காமராசர் புகழ் நிலைத்திருக்கும்.

**மு. அபிநயா,**
பி.லிட்., முதலாமியாண்டு.

## சிக்கனமும் சிறுசேமிப்பும்

முன்னுரை :

“இன்றைய சேமிப்பு - நாட்டின்
நாளைய பாதுகாப்பு “

இவ்வுலகில் வாழப் பொருள் இன்றியமையாத தேவையாகும். அதனால்தான் "பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்று வள்ளுவர் கூறுகிறார். சிக்கன வாழ்வு என்பது ஒருவன் தனது வாழ்விற்குத் தேவையான அளவு மட்டுமே பொருளைச் செலவழித்து வீண் செலவு செய்யாமல் வாழும் முறையாகும். அத்தகைய சிக்கன வாழ்வு சிறுசேமிப்பு பற்றி இக்கட்டுரை விளக்குகின்றது.

**சிறுதுளி பெருவெள்ளம் :**

இவ்வுலகில் ஒவ்வொருவரும் பொருளைச் சம்பாதிக்க உலகெங்கும் சுற்றி அலைகின்றனர். "திரைகடல் ஓடியும் திரவியம் தேடு" என்பது ஆன்றோர் வாக்கு. இன்று நாம் சம்பாதிக்கும் பொருள் இன்று மட்டுமல்ல நாளைக்கும் நமக்கும் உதவ வேண்டும். நம் எதிர்கால வாழ்வுக்கு, கல்விக்கு, மருத்துவச் செலவுகளுக்கு நாம் சேமித்தால்தான் நலமான வாழ்வை அமைத்துக் கொள்ளமுடியும்.

எறும்பு எவ்வாறு கோடைக்காலத்தில் உணவைச் சேமித்து, மழைக்காலத்தில் உணவுக்காக வைத்துக் கொள்கிறதோ, நாமும் அவ்வாறே உழைக்கும் காலத்திலேயே ஒரு சிறு அளவு பணத்தைச் சேமித்து வைக்கப் பழக வேண்டும்.

**சிக்கனவாழ்வு :**

இவ்வுலகில் வாழ்ந்த பெரியோர்கள் பலரும் சிக்கன வாழ்வால் சிறப்புச் சேர்த்தவர்கள். காந்தியடிகள், காமராசர், அன்னைதெரசா இவர்களின் வாழ்வானது எளிமையானது மட்டு மல்ல, சிக்கனமாகவும் அமைந்ததால்தான் எல்லோருக்கும் முன்மாதிரியாகத் திகழ்கிறார்கள். ஆடம்பர வாழ்விற்கு ஆசைப் பட்டு அதிகமாகக் கடன் வாங்கி வாழ்பவர்கள் வாழ்வில் கண்ணீர்தான் மிஞ்சும். நமது ஆசைக்கு ஒரு கட்டுப்பாட்டை வைத்துக் கொள்ளவேண்டும். அப்போது நாம் வாழும் சிக்கன வாழ்வு நமக்குத் தெவிட்டாத இன்பமபளிக்கும் வாழ்வாக அமையும்.

**சிக்கனமும் சிறந்த வாழ்வும் :**

நாம் ஈட்டுகின்ற பொருள் குறைவாக இருந்தாலும் செய்யும் செலவு அதனை விட அதிகமாகாமல் பார்த்துக்கொள்ள



வேண்டும். உழைத்தோம்,சம்பாதித்தோம், ஊதாரித்தனமாகச் செலவழித்தோம் என்றில்லாமல் உருப்படியாகச் செலவழித்தோம் என்று வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும். சிக்கனம் என்றால் கஞ்சனாக நடந்து கொள்வது அல்ல. தேவையான செலவை மட்டும் செய்வதாகும். அப்படித் தேவையானவற்றிற்கு மட்டும் செலவு செய்தால் நம் வாழ்வு சிறப்பானதாக அமையும்.

**சேமிப்பின் அவசியம் :**

தேனீக்கள் ஒவ்வொரு பூவிலிருந்தும் தேனை எடுத்து தேனடையில் சேமித்து வைத்துக் கொள்கின்றன. அதுபோல மனிதனும் தனது எதிர்காலத்திற்காகச் சேமித்து வைப்பது மிகவும் நல்லது. அவசரத் தேவைகளின்போது அடுத்தவரிடம் கையேந்தாமல் நம் காலில் நாம் சுயமாக நிற்க சேமிப்பு மிகவும் அவசியம். அணைநீர் எவ்வாறு வாய்க்காலாக, ஆறாக ஓடி குளமாகப் பாய்ந்து வயல்வெளிகளை எல்லாம் செழுமைப் படுத்துகிறதோ அதுபோலச் சேமிப்பானது, நம் வாழ்வை மட்டுமல்ல நம் உறவினர்களின் வாழ்வையும் வளப்படுத்தும்.

**சேமிக்கும் முறைகள் :**

"சிறுதுளி பெருவெள்ளம்" என்பது போல் சிறுகச் சிறுகச் சேமிப்பது பெரும் முதலீடாக நாளடைவில் வளர்ந்து நமக்கு நன்மை பயக்கும். நமக்கு வேண்டிய முக்கியத் தேவைகளுக்காக மட்டுமே நாம் செலவு செய்ய வேண்டும். வேண்டாத ஆடம்பரச் செலவுகளைத் தவிர்த்தல் வேண்டும். அரசு நிறுவனங்களில் மட்டுமே நாம் சேமிக்க வேண்டும். வங்கிகள், ஆயுள்காப்பீட்டு நிறுவனங்கள், கூட்டுறவு நிறுவனங்களில் உள்ள பல திட்டங்களில் நாம் சேர்ந்து சேமிக்கலாம். இன்றைய சேமிப்பு நாளைய வாழ்வின் பாதுகாப்பாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

**சேமிப்பின் பயன்கள் :**

நாம் வாழ்வில் சேமிப்புப் பழக்கத்தைத் தொடங்கினால் தேவையற்ற செலவுகளைத் தவிர்த்துவிடுவோம். நம் தேவைகளுக்காக நாம் எப்போதும் பிறரது கைகளை நம்பாமல் நமது சேமிப்பிலிருந்தே செலவுசெய்து வாழும்போது

சமுதாயத்தில் நமது மதிப்பும் புகழும் உயரும். நம்குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் நம் அன்றாடச் செலவுகளுக்கும் சேமிப்பு பெரிதும் உதவும்.

முடிவுரை :

"சிறுகச் சேமித்துப் பெருக வாழ்" என்பதற்கேற்ப நம் வாழ்வில் சேமிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்வோம். சிறப்பான வாழ்வை வளமாக அமைத்துக் கொள்வோம். சிக்கனமாய் வாழ்ந்து சிதறாமல் சேமிப்போம். மகிழ்ச்சியுடன் வாழ்வை அமைத்துக் கொள்வோம்.

**ஏ. ஒலியா,**
பி.ஏ., மூன்றாமியாண்டு

# ஓவியங்கள்

**குண்டலத்தைக் காலால் எடுக்கும் ஈசன்**








பின்னிட கோபியரின் கன்னத்திலே சின்னமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான், தாலேலோ.....
இந்த மந்திரத்தில் அவர் உறங்க, மயக்கத்திலே இவன் உறங்க
மண்டலமே.., உறங்குதம்மா ... தாலேலோ....




வெ. விஜி
பி.லிட் இரண்டாமாண்டு



## முழுமுதற் கடவுள்



கா. திவ்யா
பி.லிட் இரண்டாமியாண்டு



வை. சிவசங்கரி

பி.லிட் இரண்டாமியாண்டு



"ஆதியே கண்ணனே

கோகுல மன்னனே"

ஆ. பாண்டிச் செல்வி

பி.லிட் இரண்டாமாண்டு

சி. மோகனா
பி.லிட் . முதலாமியாண்டு







சீ. ஸ்ரீநித்யா
பி. லிட் - முதலாமியாண்டு


Art By
D. RAJASEKAR
M.Com II year




B. CHANDRU
M.Com II year


B. chandru.
M. Com II year




B.CHANDRU
M.COM


B.com
III year




I. Kanniyappan
B.com - III year



Art by

A. Ragul

B.com III rd year



Art by

Prabu. N.K

B.com IInd year


## வீரத்தின் உருவம் தமிழன்



I. JAYAKUMAR

B.Sc - Computer Science - II







S. RAJENDIRAN
BCA - III - YEAR



S. RAJENDIRAN
BCA - III - YEAR

போதிதர்மன்




S. perumal
BCA - I Year






A. Manju
BCA - I Year


ஆடல் கலை
D. Niranjan Pugazh
B.A - English - III yr


"வளர்ச்சிப் பாதையில் 'இந்தியா'"
V. Praveen Kumar
B.A - English - III yr

LOVE BIRDS









# Dr.A.P.J. அப்துல்கலாம்



Art by.
E. Oliya
B.A Eng III yr





N. Ponezhil
B.A English II year



# முழு முதற் கடவுள்
## விநாயகர்

## இணைந்திருக்கும் இருமுகங்கள்



சு. சுகன்யா

பி.ஏ - ஆங்கிலம்

இரண்டாமியாண்டு



by

R. Ramya

B. A. English

II - year


P. Siva Sankari
B.A English
II. year




Art by
Atchaya.N
B.A English-I yr



Art by
Daisy Rani.c,
B.A English I Yr